# கூட்டுறவு மேலாண்மை மற்றும் கூட்டுறவுச் சட்டம்

✷ கூட்டுறவு அமைப்பு மற்றும் கொள்கைகள்

✷ கூட்டுறவு மேலாண்மை

✷ கூட்டுறவின் கோட்பாடுகள் மற்றும் பன்னாட்டு கூட்டுறவு (ICA)

✷ வங்கிகளின் வகைகள்

✷ கூட்டுறவு வங்கி மற்றும் கூட்டுறவுச் சட்டங்கள், ஷரத்துகள்

✷ இந்திய கூட்டுறவு அமைச்சகத்தின் முக்கிய முன் முயற்சிகள்

✷ தமிழ்நாட்டில் கூட்டுறவு சங்கங்கள்

✷ கணினி – அறிமுகம்

✷ மேலாண்மை தகவல் அமைப்பு (MIS)

✷ கணினி பயன்பாடுகள்

(Word Processor, Spreed sheet, Presentation)

✷ மின் தொழில்நுட்பங்கள்

# கூட்டுறவு அமைப்பு மற்றும் கொள்கைகள்

கூட்டுறவு என்பது ஒரு வணிக நிறுவனமாகும். அது அதன் தயாரிப்புகள், பொருட்கள் அல்லது சேவைகளைப் பயன்படுத்தும் உறுப்பினர்களுக்குச் சொந்தமான மற்றும் உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப்படும் அமைப்பாகும். கூட்டுறவு உறுப்பினர்களின் வகைகள் மற்றும் உறுப்பினர்களின் அளவு ஆகியவற்றில் வேறுபாடு இருந்தாலும், உறுப்பினர்கள் குறிப்பிட்ட குறிக்கோள்களைச் சந்திக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்ட மற்றும் அங்கத்தினர்களின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு கூட்டுறவு கட்டமைக்கப்படுகின்றன.

உறுப்பினர்களால், உறுப்பினர்களுக்காக தாங்களாகவே இணைந்து நடத்தப்படும் வணிக அமைப்பே கூட்டுறவாகும். இதில் இலாபத்தை விட சேவைகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படும். கூட்டுறவுகளில் தங்கள் வர்த்தக நடவடிக்கைகளில் செங்குத்து ஒருங்கிணைப்பை ஒருங்கிணைந்து அடைய (கிடைமட்ட ஒருங்கிணைப்பு) தனிநபர்களால் கூட்டுறவு நிறுவனங்கள் உருவாகின்றன. சமுதாயத்தின் குறைந்த சக்தி வாய்ந்த உறுப்பினர்களின் நலன்களை ஊக்குவிப்பதற்காக கூட்டுறவு நிறுவனங்கள் பயன்பட்டன. விவசாயிகள், தயாரிப்பாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் நுகர்வோர் ஆகியோர் தனித்தனியாகச் சம்பாதிக்கும் அளவிற்கு அதிகமானவற்றைச் சாதிக்க முடியும் என்று கண்டனர்.

முதல் கூட்டுறவுச் சங்கம் 1844 ஆம் ஆண்டு ராபர்ட் ஓவன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இங்கிலாந்தில் 28 நெசவாளர் உறுப்பினர்களைக் கொண்ட நுகர்வோர் கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்கி "ராக்டேல் சமமான முன்னோடிகளின் சங்கம்" என்று அவர் அழைத்தார்.

மனித வரலாறு முழுவதும் பரஸ்பர நன்மைக்காக மக்கள் ஒன்று சேர்ந்து வேலை செய்திருந்தாலும், தொழில்துறை புரட்சியின் போது கூட்டுறவு அமைப்பு வணிக அமைப்பைத் தொடங்கியது. முதலில் கூட்டுறவு இயக்கம் 1844 ஆம் ஆண்டு ராபர்ட் ஓவன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இங்கிலாந்தில் 28 நெசவாளர் உறுப்பினர்களைக் கொண்ட நுகர்வோர் கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்கி "ராக்டேல் சமமான முன்னோடிகளின் சொசைட்டி" என்று அவர் அழைத்தார். இது படிப்படியாக கடன், விவசாயம், சந்தைப்படுத்துதல், செயலாக்கம். வீட்டுவசதி, போக்குவரத்து, காப்பீடு, மீன் வளர்ப்பு. கோழிப்பண்ணை, பால், பாசனம் முதலியவற்றில் உலகளவில் படிப்படியாக வளர்ந்தது. கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய நோக்கம் ஒத்துழைப்புடன் வர்த்தக பொது நலன்களைப் பின்பற்றுவதன் மூலம் தேவைப்படும் நபர்களுக்கு ஆறுதல் அளிப்பதாகும். இலாபமானது ஒரு முக்கிய நோக்கமல்ல. சேவையே இதன் பிரதான நோக்கமாகும்.

**கூட்டுறவு வரைவிலக்கணம் :** "கூட்டுறவுச் சங்கம் என்பது, உறுப்பினர்களின் பொருளாதார நலனைப் பெருக்கிக் கொள்வதற்காக, மனிதர்கள் என்ற முறையில் சமத்துவ அடிப்படையில் மக்கள் அவர்களாகவே ஒன்றுபடும் அமைப்பே கூட்டுறவு" – H.கால்வேர்ட்

"கூட்டுறவு என்பது, சிறந்த விவசாயம், சிறந்த வணிகம் மற்றும் சிறந்த வாழ்க்கை முறையாகும்". – சர் ஹொரேஸ் ப்ளங்கெட்

**கூட்டுறவுச் சங்கத்தின் எடுத்துக்காட்டுகள்**

- இந்தியன் காபி ஹவுஸ் (ரெஸ்டாரெண்ட்)
- மதர் டெய்ரி (ஆவின்)
- ஸ்ரீ மகிலா கிரியா உத்யோக் விஜஜத் பாபட்
- இந்திய விவசாயிகள் உரங்கள் கூட்டுறவு லிமிடெட் (IFFCO)
- இந்திய விமான நிறுவனம் (சரக்கு) (C.G.H.S.Ltd)
- கோ ஆப்டெக்ஸ்

**கூட்டுறவின் கொள்கைகள்**

**i. தன்னார்வ மற்றும் உறுப்பினராவதற்குத் தடையில்லா வாய்ப்பு**

கூட்டுறவு என்பது தன்னார்வ அமைப்புகளாகும். அதன் சேவைகளைப் பாலினம், சமூக, இன, அரசியல் அல்லது மத பாகுபாடு இல்லாமல் அனைவரும் பெற்றுப் பயன் அடையலாம்.

**ii. மக்களாட்சி முறையில் உறுப்பினர் கட்டுபாடு**

கூட்டுறவு மக்களாட்சி முறையில் அதன் உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. உறுப்பினர்கள் கூட்டுறவின் சேவைகளைப் பயன்படுத்துபவர்களாகவோ, கொள்கைகளை எடுப்பதிலும் அமைப்பதிலும், முடிவுகளை தீவிரமாக தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள்.

**iii. உறுப்பினர்களின் பொருளாதார பங்களிப்பு**

உறுப்பினர்கள் கூட்டுறவு மூலதனத்தை சமமாக, ஜனநாயக முறையில் பங்களித்து கட்டுப்படுத்துகின்றனர். இந்த நன்மைகள் உறுப்பினர்கள் மூலதனத்தில் முதலீடு செய்வதை விட ஒத்துழைப்புடன் நடத்தும் வியாபார விகிதத்தில் இருக்கும்.

**iv. தன்னாட்சி மற்றும் சுதந்திரம்**

கூட்டுறவு நிறுவனங்கள் தங்கள் உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப்படும் தன்னாட்சி, சுய உதவி அமைப்புகள் ஆகும். கூட்டுறவு நிறுவனங்கள் மற்ற அமைப்புகளுடன் ஒப்பந்தங்களில் நுழைந்தால் அல்லது மூல ஆதாரங்களிலிருந்து மூலதனத்தை உயர்த்தினால், உறுப்பினர்கள் ஜனநாயகக் கட்டுப்பாட்டை உறுதிசெய்வதோடு, கூட்டுறவுச் சுயாட்சியைத் தக்கவைத்துக் கொள்வதன் அடிப்படையில் இது செய்யப்படுகிறது.

**v. கல்வி, பயிற்சி, மற்றும் தகவல்**

உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், மேலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கான கல்வி மற்றும் பயிற்சியளிப்பை கூட்டுறவில் வழங்குகிறார்கள். அதனால் அவர்கள் கூட்டுறவு அபிவிருத்திக்கு திறம்பட பங்களிக்க முடியும். மேலும் அவர்கள் கூட்டுறவுகளின் இயல்பு மற்றும் நன்மைகளைப் பற்றி பொது மக்களுக்குத் தெரிவிக்கின்றனர்.

**vi. கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு**

கூட்டுறவு உறுப்பினர்கள் தங்கள் உறுப்பினர்களை மிகவும் திறமையாகவும், உள்ளூர், தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச கட்டமைப்புகள் மூலம் ஒன்றாக இணைந்து கூட்டுறவு இயக்கத்தை பலப்படுத்தவும் செய்கின்றனர்.

**vii. சமூகத்திற்கான கவலை**

கூட்டுறவில் உறுப்பினர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் போது, உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளும் கொள்கைகள் மற்றும் திட்டங்களின் மூலம் சமூகங்களின் நிலையான அபிவிருத்திக்காக கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன.

**கூட்டுறவின் சிறப்பியல்புகள்**

**i. தன்னார்வ உறுப்பினர் சேர்க்கை**

கூட்டுறவு அமைப்புகளில் உறுப்பினராகச் சேர்வது கட்டாயம் அல்ல. சங்கங்களில் எவரும் தானாக முன்வந்து உறுப்பினர் ஆகலாம். எப்போது வேண்டுமானாலும் உறுப்பினர் தகுதியில் இருந்து விலகிக் கொள்ளலாம்.

**ii. சம உரிமைகள்**

கூட்டுறவில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு மட்டுமே உண்டு. அவர் எத்தனை பங்குகள் வாங்கினாலும் ஒரு வாக்கு மட்டுமே செலுத்த முடியும். எனவே அனைவரும் நிர்வாகத்தில் சமபங்கு எடுக்க சங்கங்கள் வாய்ப்பு அளிக்கின்றன.

**iii. மக்களாட்சி**

கூட்டுறவுகளில் மக்களாட்சி முறையில் முடிவுகள் எடுக்கப்படுகிறது. முடிவுகளில் பெரும்பான்மை இருந்தால் இறுதி முடிவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

சர்வதேசக் கூட்டுறவு இயக்கத்தின் ஏழு வண்ண வானவில் கொடி ஒரு பொதுவான அடையாளமாகும். 1922 இல் ஜெர்மனியில் உள்ள எஸ்சனில் என்ற நகரில், பன்னாட்டு கூட்டுறவு கூட்டு மன்றத்தின் மூலம் (ICA) என்ற அமைப்பு ஜீலை 1923 இல் நடைபெற்ற முதல் கூட்டுறவு தினத்தில் சர்வதேசக் கூட்டுறவுச் சின்னம் மற்றும் ஒரு கொடியை வடிவமைத்தது.

**iv. நேர்மை**

நேர்மை என்பது கூட்டுறவின் அடிப்படைக் கொள்கை. கூட்டுறவில் உறுப்பினர்கள் நேர்மையாக இருக்க வேண்டும். சுயநலமிகளுக்கு (Selfish) சங்கத்தில் இடமில்லை.

**V. பரஸ்பர நம்பிக்கை**

கூட்டுறவுச் சங்கத்தின் அடித்தளம் பரஸ்பர நம்பிக்கை. கூட்டுறவுகளில் ஒவ்வொரு உறுப்பினரும் தங்களுக்குள் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். அவர்கள் அனைவரும் ஒரு குழுவாக அணிவகுக்க வேண்டும். அதுவே அவர்களின் முன்னேற்றத்திற்கு உதவும்.

**vi. நல்வாழ்வு எனும் முக்கிய குறிக்கோள்**

உறுப்பினர்கட்குச் சீரிய முறையில் சிறந்த சேவை புரிய வேண்டும் என்பதே பிரதான நோக்கமாக இருக்க வேண்டும் என கூட்டுறவுகள் செயல்படுகின்றன.

**vii. பணம் செலுத்துதல்**

இச்சங்கங்களில் கடன் நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளது. எல்லா வியாபாரமும் ரொக்கத்தன்மை அடிப்படையில் நடத்தப்படுகிறது.

**viii. சிக்கனம்**

கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் சிக்கன கொள்கை கொண்டிருக்க வேண்டும். அவர்கள் கூட்டுறவுகளின் மூலதனத்தைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது மற்றும் எப்போதும் கூட்டுறவின் நலன்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

**ix. இலாப பகிர்வு**

கூட்டுறவுச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி சங்கங்களின் இலாபம் பகிரப்பட வேண்டும். இலாபத்தின் ஒரு பங்கை காப்பில் (Reserve) இல் வைக்க வேண்டும். இலாபத்தில் 10 விழுக்காட்டினை உறுப்பினர்களின் சேவைக்குப் பயன்படுத்த வேண்டும்.

**X. சுய சேவை**

சங்கங்களின் செயல்களை உறுப்பினர்களே கவனிக்கின்றனர். எல்லா உறுப்பினர்களும் உரிமையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள். எனவே அவர்கள் அனைவரும் ஒருவருக்காக, ஒவ்வொருவரும் அனைவருக்காக என்ற மகத்தான கூட்டுறவு கொள்கையின் அடிப்படையில் செயல்படுகின்றன.

### கூட்டுறவுச் சங்கங்களின் நன்மைகளும் குறைபாடுகளும்

**நன்மைகள்**

**i. தன்னார்வு நிறுமம்**

கூட்டுறவுச் சங்கங்களில் யார் வேண்டுமானாலும் உறுப்பினர் ஆகலாம். பொதுவான நோக்கமுள்ள எவரும் இதன் உறுப்பினராகலாம். உறுப்பினர் தொகையும் மிகவும் குறைவாக இருப்பதனால், பொருளாதார ரீதியாக பின்தங்கியவர் முதல் முன்னேறியவர் வரை யாரும் உறுப்பினராக ஆக முடியும். எவரும் சங்கத்தை விட்டு எப்போதும் வெளியேற தடை இல்லை. உறுப்பினர்கள் தன்னார்வத்துடன் முன் வந்து சங்கத்தினை அமைத்திட வேண்டும்.

**ii. எளிமையான தோற்றுவிப்பு**

குறைந்தபட்சம் இளவர் அல்லாத 25 உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கத்தினை ஆரம்பிக்கலாம். சங்கத்தை ஆரம்பிக்க சட்ட சடங்குகள் அதிகம் இல்லை.

**iii. மக்களாட்சி**

கூட்டுறவுச் சங்கங்கள் "ஒருநபர் ஒருவாக்கு" என்ற கோட்பாட்டில் இயங்கி வரும் நிறுமமாகும். உறுப்பினர் எவ்வளவு பங்கு வைத்திருந்தாலும் ஒருவாக்கு மட்டுமே செலுத்த முடியும். எனவே பொருளாதார அடிப்படையில் கூட்டுறவு நிர்வாகத்தை நடத்துவதில் அனைவரும் பொதுவானவர்களே.

**iv. சமத்துவ அடிப்படையில் இலாபத்தை பகிர்தல்**

கூட்டுறவுச் சங்கங்கள் ஈட்டும் உபரி, சமத்துவமாக அனைவருக்கும் பங்கிட்டு தரப்படுகிறது. இதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் அனைத்து உறுப்பினர்களும் பயன்பெறுவர். ஈட்டும் உபரியில் 10 விழுக்காட்டை சங்கம் செயல்பட்டு வரும் பகுதி மக்களின் நலனுக்கு செலவிட வேண்டும்.

**v. வரையறுக்கப்பட்ட பொறுப்பு**

கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்த நபர்களின் பொறுப்புகள் அவர்கள் வாங்கிய பங்கு முதலுடன் அடங்கி விடுகிறது. கூட்டுறவுச் சங்கங்களை கலைக்கும் போது அந்நிறுவனத்தின் நிதி பொறுப்புகளைத் தீர்க்க உறுப்பினர்களின் சொந்த சொத்துக்களை ஈடுபடுத்த முடியாது. எனவே உறுப்பினர்களின் பொறுப்பு அளவுடையது.

**vi. சட்ட உரு**

கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தினால் வழங்கப்பட்ட தனித்தன்மை கொண்டது. எனவே உறுப்பினர்களின் இறப்பு, துறப்பு, நொடிப்பு, மனநிலை சமனின்மை, திறனிழப்பு போன்ற நிகழ்வுகள் சங்கங்களின் ஆயுளை பாதிப்பதில்லை.

**vii. பொது நலன்**

கூட்டுறவுச் சங்கங்கள் சுய உதவி மற்றும் ஒருவருக்கொருவர் உதவி புரிதல் என்ற கோட்பாட்டில் ஆரம்பிக்கப்படுவதால், சங்க உறுப்பினர்கள் பொது நலனை எட்ட அனைவரும் பங்களிக்கின்றனர்.

**viii. சிறப்பான நிர்வாகம்**

கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இயங்குவதாலும் அங்கு வசிக்கும் மனிதர்களால் ஆரம்பிக்கப்படுவதாலும், உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுக்குள் ஒன்றாக பழகி, நிறுமத்தை அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டுழைப்பில் நடத்தி வருகின்றனர். எனவே அதன் நிர்வாகம் சிறப்பாக செயல்படுகிறது.

**ix. அரசின் ஆதரவு**

அரசும் கூட்டுறவு நிறுமங்களை வளர்த்து விட பல்வேறு ஆதரவுகளை நல்கி வருகின்றன. சலுகை வட்டியில் கடன், மானியம் மற்றும் அரசுநிறுமங்களின் தேவையை கூட்டுறவுச் சங்கங்களிடம் வாங்குதல் போன்ற செய்கைகளின் மூலம் நல்லாதரவை வழங்கி வருகின்றன.

**X. இடைநிலையரைத் தவிர்த்தல்**

கூட்டுறவுச் சங்கங்கள் நேரடியாக தயாரிப்பாளர் அல்லது உற்பத்தியாளரிடம் தேவைப்படும் பொருட்களை கொள்முதல் செய்வதால், நுகர்வோர்கட்கு பொருட்களை குறைவான விலையில் விற்பனை செய்கின்றன. இதனால் இடைநிலையர் குறுக்கீடு என்ற பேச்சுக்கே கூட்டுறவு தத்துவத்தில் இடமில்லை. இடைநிலையரை அகற்றி பெறப்படும் இலாபத்தை பங்கிட்டு தருவதுதான் கூட்டுறவின் தத்துவமாகும்.

**xi. வரிச்சலுகை**

அரசும் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிக்க பலவகை வரிச்சலுகைகளை வழங்கி வருகின்றது.

**xii. ஊரகக் கடன்**

சிற்றூர்களில் வசித்து வரும் மக்களில் பெரும்பாலானோர் உள்ளூர் கந்துவட்டிக்காரர் மற்றும் நாட்டு வங்கியர்களின் பிடியில் சிக்கி தவிப்பதை கூட்டுறவுச் சங்கங்கள் மீட்டு வருகின்றன. சலுகைவட்டியில் சங்கங்கள் கடன் நல்கி அவர்களை வட்டிக் கொடுமையிலிருந்து மீட்டு வருகின்றன. இயற்கையின் சீற்றத்தினால் வாடும் வேளாண்மையினரையும் கடன் தள்ளுபடியின் மூலமும், வட்டி தள்ளுபடி மூலமும் கடன் தவணைகளை நீட்டித்து தருவதன் மூலமும் காத்து வருகின்றன.

**குறைபாடுகள்**

**i. அளவான நிதி ஆதாரங்கள்**

கூட்டுறவுச் சங்க நிறுமங்களின் நிதி ஆதாரம் பிற அமைப்புகளைக் காட்டிலும் குறைவு. உறுப்பினர் கட்டணம் குறைவு. மேலும் உறுப்பினர்களின்

பங்கு முதல் குறைவாக இருப்பதால், கூட்டுறவுச் சங்கங்களினால் பெரும் முதல் திரட்டி பேரளவு வியாபாரத்தில் ஈடுபட முடிவதில்லை. மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களின் செயல்பாட்டை குறிப்பிட்ட அளவிற்கு மேல் விரிவாக்க முடியாமல் தவித்து வருகின்றன.

**ii. அரசின் நிதி ஆதாரங்களை பெரிதும் நம்பியிருத்தல்**

கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் தங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள முடியாமல் அரசின் நிதி ஆதரவை நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலையில் அவைகள் செயல்பட்டு வருகின்றன. எனவே கூட்டுறவு நிறுமங்கள் தங்களின் செயல்பாடுகளை விரிவாக்க முடிவதில்லை.

**iii. அரசால் துவங்கப்பட்ட சங்கங்கள்**

மேற்கத்திய நாடுகளில் கூட்டுறவு அமைப்புகள் ஏழை எளியவர்களால் தானாக முன் வந்து துவக்கப்பட்ட நிறுமங்கள். ஆனால் இந்தியாவில் பெரும்பாலான சங்கங்கள் அரசின் வற்புறுத்தலால் துவக்கப்பட்ட சங்கங்கள் என கூறப்படுகின்றன. எனவே இங்குள்ள சங்க உறுப்பினர்களின் பங்கெடுப்பு தானாக முன் வந்தது இல்லை என்றும் கூறப்படுகிறது. இப்படி திணிக்கப்பட்ட சங்கங்கள் மக்கள் ஆதரவின்றி நொடித்துப் போக வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட வாய்ப்புள்ளது.

**iv. ஊரக பகுதி செல்வந்த உறுப்பினர்களின் பலனுக்காக செயல்படுதல்**

கூட்டுறவுச் சங்கங்களில் யார் வேண்டுமானாலும் உறுப்பினராக ஆகலாம் என்ற வாய்ப்பு இருப்பதால் உள்ளூரில் உள்ள செல்வந்தர்கள் மற்றும் சில இடைநிலையர்கள் உறுப்பினர்கள் என்ற வேடமணிந்து நிர்வாகக் குழுவின் முக்கிய பதவிகளைப் பெற்று, வேண்டுமென்று நய வஞ்சகமாக கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தை சீர் குலைத்து சங்கங்களை மூடிவிடும் நிலைக்குத் தள்ளிவிடுகின்றனர் எனக் கூறப்படுகிறது. பெரும் செல்வந்தர்களாக உள்ள வேளாண் குடியினரின் சங்கங்களை நன்றாக தங்களின் சுயநலத்திற்குப் பயன்படுத்தித் தங்களைப் பொருளாதார ரீதியாக வளப்படுத்திக் கொள்கின்றனர். சிறு மற்றும் குறு வேளாண்மையாளர்களால் உபரியாக பொருளை உற்பத்தி செய்து சங்கத்திற்கு அளிக்க முடியாதவர்கட்கு கூட்டுறவுச் சங்கங்களினால் யாதொரு பயனும் விளைவதில்லை என்றால் மிகையாகாது.

**v. உள்ளூர் கடனாளர்களின் பிடியில் இருந்து மக்களை மீட்க முடியாமை**

கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்கட்கு உற்பத்தி நடவடிக்கைகட்கு மட்டுமே கடன் வழங்குகின்றன. அவர்களின் சொந்த அல்லது குடும்ப செலவிற்கு கடன் தருவதில்லை. இந்நிலையில் அவர்கள் உள்ளூர் கடனாளர்களிடம் தொடர்ந்து கடன் அடிமைகளாக தொடரும் அவல நிலை ஏற்படுகிறது. எனவே கூட்டுறவுச் சங்கங்கள் சாதாரண ஏழை எளியவர்களைக் கடனாளர்களிடமிருந்து மீட்டு விட்டதாக கூறிக் கொள்ள முடியாது.

**vi. நிர்வாக வல்லுநர்களை பணி அமர்த்த முடியாமை**

கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வாக குழுவினால் மேலாண்மை செய்யப்படுகிறது. இந்த நிர்வாக குழு உறுப்பினர்கள் தேவையான கல்வித் தகுதியை அனுபவமோ அல்லது ஆற்றலோ இல்லாது இருக்கும் நிலையில், சங்க நிர்வாகம் சிறப்பாக நடத்த முடிவதில்லை. மேலும் கூட்டுறவுச் சங்கங்களால் தொழில் படிப்பு படித்த அல்லது பட்டயம் பெற்ற நிர்வாகிகளை அமர்த்தி நிர்வாகத்தை தொழில் ரீதியாக சிறப்பாக நடத்த போதிய நிதி ஆதாரங்கள் இல்லை. எனவே கூட்டுறவு அமைப்புகள் தங்களின் தலையாய நோக்கங்களை சிறப்பாக அடைய முடிவதில்லை.

**vii. தன்னிச்சையாக செயல்பட முடியாமை**

கூட்டுறவுச் சங்கங்கள் அரசின் பிடியில் அல்லது மேற்பார்வையில் இயங்கி வருவதனால், அரசின் கட்டுப்பாட்டு விதி முறைகள் குறுக்கீடுகள் சங்கங்களை தன்னிச்சையாக செயல்பட அனுமதிப்பதில்லை. அவற்றின் தன்னாட்சி உரிமை முடக்கப்படுகிறது.

**viii. நாணயமற்ற நிர்வாக உறுப்பினர்கள்**

நிர்வாக குழுவில் இருப்பவர்கள் நாணயத் தன்மை குன்றியவர்களாக இருக்க நேர்ந்தால் சங்கங்களின் நிதியை கையாடல் செய்து சங்கங்களை பாதாளக் குழியில் தள்ளிப் புதைக்கும் வாய்ப்பு உள்ளது.

**ix. தேர்ச்சி பெற்ற வல்லுநர்களை அமர்த்த முடியாமை மற்றும் புதிய நுட்பங்களை புகுத்த முடியாமை**

கூட்டுறவு அமைப்புகளின் நிதி ஆதாரங்கள் குறைவாக இருப்பதால், அவர்களால் நன்றாகப் படித்து பட்டம் அல்லது பட்டயம் பெற்ற மனித சக்தியை சங்கங்களின் பதவிகளில் அமர்த்த முடிவதில்லை. சங்கங்களினால் புதிய தொழில் நுணுக்கங்களைப் புகுத்த முடிவதில்லை. எனவே பல சங்கங்கள் இன்னும் பழைய பாரம்பரிய முறையில் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில் அவர்களால் புதியதாக முளைத்த நிறுவனங்களோடு சமமாகப் போட்டியிட முடிவதில்லை. இதனாலும் பல சங்கங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன.

**x. இரகசியம் காக்க முடியாமை**

கூட்டுறவுச் சங்கங்களால் இரகசியத் தன்மையைக் காக்க முடிவதில்லை. சங்கங்களின் செயல்பாடுகள் இலாபம், சொத்து பொறுப்பு நிலைமைகள், வாராக்கடன் முதலீடுகள் போன்ற அனைத்தையும் பகிரங்கமாக அறிக்கை மூலம் உறுப்பினர்களுக்குத் தெரிவித்து விவாதிக்க வேண்டிய கடமை உள்ளது. மேலும் சங்கங்களின் அறிக்கைகள் கணக்குகளை கூட்டுறவுச் சங்கப் பதிவாளரிடம் கால வாரியாக தாக்கல் செய்ய வேண்டும். எனவே மந்தனமாக (Secrecy) செய்திகளை வைத்திருத்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால் தனியார் நிறுமங்கள் பல இரகசிய செயல் மூலம் தில்லு முல்லு செய்து அதிக இலாபம் ஈட்டி வருகின்றன. இப்படிப்பட்ட இரகசிய செயல்பாடுகள் தில்லுமுல்லுகள் கூட்டுறவு அமைப்புகளில் செய்வது இயலாத காரியம்.

**xi. உறுப்பினர்களின் உட்போரினால் சங்கங்களின் செயல்திறன் மங்குதல்**

உறுப்பினர்களிடையே ஏற்படும் மனக்கசப்புகள் வேறுபாடுகள், கருத்து மோதல், காழ்ப்புணர்ச்சி, போட்டி, பொறாமைகள் சங்கங்களின் செயல்பாட்டை முடக்கும் தன்மை கொண்டவை.

**xii. பேரளவு வியாபாரத்தில் ஈடுபட முடியாமை**

அனைத்துத் துறைகளிலும் கூட்டுறவுச் சங்கங்களை ஈடுபடுத்த முடியாது. அவர்களது நோக்கம் சில துறைகளில் மட்டுமே இருக்கும். கூட்டுறவுச் சங்கங்களின் குறைவான நிதி ஆதாரங்களினால் பேரளவு தொழில்களை துவங்க முடிவதில்லை.

**கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள்**

**அ. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்**

நுகர்வோர் கூட்டுறவை நுகர்வோர்கள் ஆரம்பிக்கின்றனர். இந்த சங்கங்கள் மற்ற சில்லறை வணிகர்களைப் போல இலாபம் ஈட்டுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இயங்காமல், மக்களுக்குத் தரமானப் பொருட்களை, சிறந்த விலையில் வழங்குவதை பிரதான நோக்கமாகக் கொண்டு இயங்கி வரும் சங்கங்களாகும். கூட்டுறவுச் சிறப்பங்காடியை மாணவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு மளிகை சங்கங்கள் போன்ற சங்கங்கள் நுகர்வோர் கூட்டுறவின் ஒரு வடிவம். கடன் ஒன்றியங்கள் வங்கிகளின் சேவையையும் செய்து வருகின்றன. கடன் ஒன்றியத்தில் 90 மில்லியன் உறுப்பினர்கள் உள்ளனர்கள். அவற்றின் சொத்து பல மடங்கில் பெருகி ஒரு வலுவான அமைப்பாக இந்தியாவில் வேரூன்றி உள்ளது என்றால் மிகையாகாது. பொது விநியோகத் திட்டத்தையும் இவை செயல்படுத்தி வருகின்றன.

**ஆ. உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்**

உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தியாளர்களால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப் படுகிறது. உற்பத்தியாளர்கள் அனைவரும் ஒரு மைய இடத்திற்கு வந்து உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடலாம் அல்லது அவரவர் இருப்பிடத்தில் உற்பத்தி செய்து முடிவுற்ற பொருளை சங்கத்திடம் ஒப்படைக்கலாம். இவ்வகை உற்பத்தி சங்கங்கள் செலவை குறைத்து

உற்பத்தி செய்யப்பட்ட பொருளை மையமாகத் திரட்டி ஒட்டு மொத்தமாக சந்தை இடுகின்றன. கூட்டுறவு நெசவாளர்கள் சங்கம், கூட்டுறவு தீப்பெட்டி தயாரிப்பாளர் சங்கம், தச்சு தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் போன்ற சங்கங்கள் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கத்திற்கு உதாரணமாக விளங்குகின்றன.

**இ. கூட்டுறவுச் சந்தையிடு சங்கங்கள்**

கூட்டுறவுச் சந்தையிடு சங்கம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மொத்தமாகத் திரட்டி அவைகளைச் சந்தையிடும் நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட சங்கம். இச்சங்கங்கள் முடிவுற்ற பொருட்களைத் தரம் பிரிப்பது, பண்டகத்தில் வைத்துக் காப்பது, விளம்பரம் செய்வது, கட்டுவது, ஏற்றுவது, அனுப்பி வைப்பது போன்ற சந்தையிடல் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் சங்கமாகும். பொருள் தேவைப்படும் இடம் மிக தூரத்தில் இருப்பினும் அங்கு பொருளை அனுப்பி அங்கு பொருளுக்கு சந்தையை சிறந்த விலையில் வழங்குகின்றன. உறுப்பினர்கட்கு அளித்த பொருளின் பேரில் முன் பணங்கள் வழங்குகின்றன.

இந்த சங்கம் இல்லாத நிலையில் பல்வேறு வேளாண்மையினால் சிறு உற்பத்தியாளர்கள் கைவினைஞர்கள் போன்றோர்கள் இடை நிலையர்களிடம் அடிமாட்டு விலையில் பொருளை விற்று நலிந்து போயிருப்பார்கள். அவர்களை எல்லாம் கைதூக்கி விடும் சங்கங்களே சந்தையிடு சங்கம் என்றால் மிகையாகாது.

**ஈ. கூட்டுறவு கடன் சங்கங்கள்**

உறுப்பினர்கட்கு குறுகியகால கடன் வழங்குதல் தேர்ச்சி பெற்ற சங்கம் கடன் சங்கம் ஆகும். வேளாண்மையினர், கைவினைஞர்கள், தொழில் புரிபவர்கள், ஊதியம் ஈட்டுகிறவர்கள் போன்றோர்க்கு கடனளிக்கும் உன்னத பணியை கடன் சங்கங்கள் நல்கி வருகின்றன. வங்கிகளிடம் இருந்து கடன் பெறமுடியாமல் உள்நாட்டு நபர்களிடமிருந்து அதிக வட்டியில் கடன் வாங்கி சீரழியும் பலரை குறைவான வட்டியில் கடன் ஈந்து அவர்களை இடைநிலையர் பிடியிலிருந்து மீட்டுவரும் உன்னதமான சங்கம் கடன் சங்கங்கள். சுரண்டலை ஒழிப்பது. சிக்கனத்தை வளர்ப்பது என்பதே கடன் சங்கங்களின் தாரக மந்திரம். கடன் சங்கங்கள் வேளாண் கடன் சங்கமாகவோ அல்லது வேளாண் சாரா சங்கமாகவோ இருக்கலாம்.

**உ. வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள்**

உறுப்பினர்கட்கு சொந்தமாகவோ அல்லது வாடகைக்கோ வீடுகளை பெற்றுத் தரும் சங்கங்களே வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் எனப்படுகின்றன. சொந்தமாக வீடு கட்ட விழையும் அன்பர்கள் அனைவரும் ஒன்று திரண்டு வீடுகட்ட கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுகின்றனர். இச்சங்கங்கள் உறுப்பினர்கட்கு சுமார் 10 முதல் 20 ஆண்டு கால தவணையில் வீட்டு கடன் ஈந்து அவர்களை சொந்த வீடு கட்டிக் கொள்ள உதவுகின்றன. சில வீட்டு சங்கங்கள் மொத்தமாக காலிநிலங்களை வாங்கி, வீடுகட்டி உறுப்பினர்கட்கு வாடகைக்கு வீடுகளை விடவும் செய்கின்றன. வாடகைக்கு குடி இருக்கும் நபர் அந்த வீட்டில் முழு மதிப்பையும் செலுத்தி உரிமையாளராக ஆகவும் முடியும்.

**ஊ. உழவர் கூட்டுறவுச் சங்கங்கள்**

உள்ளூரில் இருக்கும் வேளாண் குடிகள் தங்களின் நிலங்களை தனித்தனியே பயிரிடுவதற்கு பதிலாக அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து தங்களின் நிலங்களை ஒன்றாகத் திரட்டி பேரளவில் விவசாயம் செய்ய உதவும் சங்கமே கூட்டுறவு உழவு சங்கம் எனப்படும். அனைத்து விவசாயிகள் நிலத்தை ஒன்று திரட்டி சங்கமாக செயல்பட்டாலும் அவர்களின் நில உரிமை பாதிக்கப்படாது. அவர்கள் அனைவரும் சங்கம் அமைத்து அவர்களே நிர்வாகக் குழுவை தேர்ந்தெடுத்து உழவு சங்கத்தை நிர்வகிக்க வேண்டும். கூட்டாகப் பயிரிட வேண்டும். நிர்வாகக் குழு சந்தையின் தேவைக்கு ஏற்ப தட்ப வெப்ப நிலையை ஒட்டி எந்த பயிர் செய்வது எந்த அளவில் செய்வது என முடிவு செய்யும். நிலத்தை பங்காக கொடுத்த விவசாயிகட்கு வாடகையும் அவர்கள் கூட்டாக திரட்டிய நிலத்தில் உழைத்ததற்கு கூலியும் பெறுவார்கள். இம்முறையில் பேரளவில் பயிர் செய்து விவசாயிகள் பலன் பெறலாம். இம்முறை இரஷ்யாவில் மிகவும் வெற்றி கண்டது.

# கூட்டுறவு மேலாண்மை

**வங்கி முறை**

வங்கி, வங்கியியல், வங்கியர், வங்கி முறை என்ற பல சொற்களின் அடிப்படையில் சொல்லின் மாற்றுருவங்களே, இவற்றில் எந்த ஒரு சொல்லுக்கு இலக்கணம் வகுத்தாலும் அது வங்கிக்கு உண்டானச் சிறப்பியல்புகளை காட்டுவதாக அமையும். வங்கி முறைக்கு இலக்கணம் வகுக்கப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் இதுவரை எல்லோராலும் ஒப்புக் கொள்ளும் படியானதொரு கூற்று தென்படவில்லை என்றே கூறலாம். இந்திய வங்கி முறை பெரும்பாலும் ஆங்கிலேய வங்கி முறையை பின்பற்றியே அமைந்துள்ளது. இங்கிலாந்து நாட்டிலும் சட்ட முறையாக இலக்கணம் இல்லாத நிலையில் அங்கு தோன்றிய சில அறிஞர்கள் வங்கி முறைக்கு இலக்கணம் வகுக்க முன் வந்தனர். அவர்களில் முதன்மையாக டாக்டர் ஹெர்பர்ட் எல். ஹார் வங்கி முறைக்கு கீழ்க்கண்டவாறு இலக்கணம் கூறியுள்ளார்.

எவரொருவர் தம் சார்பாகவும் பிறர் சார்பாகவும் நடப்புக் கணக்கில் பணத்தைப் பெற்றுக் கொண்டு, பின்னர் பணம் போட்டவர்கள், காசோலை அனுப்பினால் அதை மதிப்பதை தன்னுடைய தலையாயப் பணியாகக் கொண்டுள்ளாரோ அவரே வங்கியர் ஆவார் என்று விளக்கம் அளித்துள்ளார்.

சர்ஜான் பேஜட் என்ற அறிஞரும் வங்கி முறைக்கும் கீழ்கண்டவாறு விளக்கம் தந்துள்ளார். நடப்புக் கணக்கில் பணம் பெற்றுக்கொள்ளுதல், பல்வேறு கணக்குகளின் பேரில் பணத்தை பெற்றுக்கொள்ளுதல், காசோலை வெளியிடல், காசோலைக்குப் பணம் வசூலித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ள நபரை அல்லது நிறுவனத்தை வங்கியர் எனலாம். மற்றும் அவர் தம்மை வங்கியர் என்று அறிவித்துக்கொள்ள வேண்டும். பொது மக்களும் அவரை வங்கியர் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேற்கூறிய இரண்டு விளக்கங்களிலும் வங்கிப் பணிகளைப் பற்றி தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. எனவே, அவை முற்றுப்பெறாத விளக்கங்கள் என்று பலரும் அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒவ்வொரு நாட்டிலும் வங்கி முறைக்கு இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. நம் நாட்டில் 1949 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வங்கி ஒழுங்காற்றுச் சட்டம் வங்கி முறைக்கு இலக்கணம் வகுத்துள்ளது. வங்கி ஒழுங்காற்றுச் சட்டம் பிரிவு 5(6) ல் வங்கி முறை என்றால் பிறருக்குக் கடன் கொடுப்பதற்காகவோ அல்லது வங்கியர் விருப்பப்படி எதிலும் முதலீடு செய்யவோ அல்லது வேறு எதற்காகவாயினும் பொதுமக்களிடமிருந்துப் பணத்தை வைப்பாகப் பெற்று பின்னர் பணம் போட்டவர்கள் காசோலை மூலமாகவோ அல்லது பணவிடை மூலமாகவோ அல்லது அவர்களது உத்தரவின்படியோ கேட்கும்போது திருப்பிக் கொடுப்பதாகும். இவையும் தவிர வங்கி முறை சம்பந்தப்பட்ட எத்தொழிலையும் செய்வதாகும் என்று விளக்கம் தரப்பட்டுள்ளது.

மேற்கூறிய விளக்கத்தில் வங்கியின் பணிகளைப் பற்றி தெரிந்து கொள்ள முடிகிறது. வைப்புகளைத் திரட்டுதல், கடன் வழங்குதல் மற்றும் வாடிக்கையாளருக்கு முகவர் மற்றும் பொதுப் பயன் பணிகளை செய்வதுதான் வங்கிப்பணிகள் என்று விளக்கம் தரப்பட்டள்ளது. வங்கிப்பணிகள் பற்றி முழுமையாக இவ்விளக்கத்தில் கூறப்பட்டுள்ளதால் இவ்விளக்கம் வங்கி முறைக்கு ஒரு சிறந்த விளக்கமாகக் கருதப்படுகின்றது.

**வங்கிப் பணியின் சிறப்பு**

மற்ற தொழில்களைப் போன்று வங்கித் தொழிலும் ஒரு தொழிலாக கருதப்பட்டாலும் மற்ற தொழில்களுக்கு இல்லாத சிறப்பு வங்கித் தொழிலுக்கு உண்டு. ஒரு வியாபாரி பணத்தை முதலீடு செய்து சரக்கு

வாங்கி சற்று கூடுதலான விலைக்கு விற்று இலாபம் ஈட்டுகின்றார். ஆனால் வங்கியர், வாடிக்கையாளரிடமிருந்து குறைந்த வட்டிக்கு பணத்தையே தற்காலிகமாக வாங்கி சற்று கூடுதலான வட்டிக்கு கடன் கொடுத்து இரண்டு வட்டி விகிதங்களிடையேயுள்ள வேறுபாட்டினை இலாபமாக அடைகின்றார். மேலும், வாடிக்கையாளர் கொடுத்த பணத்தை தனது விருப்பப்படி எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். வாடிக்கையாளரும், தாம் வங்கியில் செலுத்திய அதே பணத்தையும், நாணயத்தையும், கோர முடியாது. அவர் செலுத்திய தொகைக்கு சமமான தொகையையே பெற்றுக் கொள்ளலாம். வாடிக்கையாளர் கேட்டாலன்றி வங்கியர் பணத்தை செலுத்த மாட்டார். எனவே, வங்கித் தொழில் மற்ற தொழில்களிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது. பம்பாய் வங்கி விசாரணைக்குழு "என் மூளையும், உங்கள் பணமும்தான் வங்கித் தொழில்" என்று தனது அறிக்கையில் வங்கித் தொழிலைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து வங்கித் தொழில் எவ்வளவு சிறப்பு வாய்ந்தது எனத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

**வங்கிப் பணிகள்**

வங்கிப் பணிகளை இரு பெறும் கூறுகளாக பிரிக்கலாம்.

**1. தலையாயப் பணிகள்**

- வைப்புகளை திரட்டுதல்
- கடன் வழங்குதல்

**2. துணைப் பணிகள்**

- மாற்றுமுறை ஆவணங்களுக்குப் பணம் வசூலித்தல்
- ஆயுள் காப்பீட்டுக் கழக சந்தாத் தொகையை வசூலித்தல்
- அனுப்புகை வசதிகள்
- பாதுகாப்புப் பெட்டக வசதி
- பயணக் காசோலைகள் வழங்குதல்
- வணிக உறுதிக் கடிதம் வழங்குதல்
- ஒப்புறுதிப் பணிகள்
- பிணையங்கள் வாங்குதல், விற்றல்
- பொறுப்புரிமையர், நிறைவேற்றாளர் பணிகள்
- கடன்களுக்கு ஏற்பாடு செய்தல்
- வருமான வரி கணக்குகளை முடித்தல்
- அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு முகவராகப் பணியாற்றுதல்
- உத்திரவாதம், இழப்பீடு சம்பந்தமான பணிகள்.

**கூட்டுறவு வங்கிகளின் பணிகள்**

கூட்டுறவு வங்கிகளின் பணிகளை இரண்டு விதமாகப் பிரிக்கலாம்.

- தலையாயப் பணிகள்
- துணைப் பணிகள்

கூட்டுறவு வங்கிகள் வைப்புகளை திரட்டுவதையும் கடன் வழங்குவதையும் தலையாயப் பணிகளாக் கொண்டு செயல்படுகின்றன. கேட்பு, பணவிடை போன்ற மாற்று முறையாவணங்களுக்கு பணம் வசூலித்தல் மற்றும் செலுத்துதல், வாடகை மற்றும் இலாப ஈவு செலுத்துதல், வட்டி வசூலித்தல், காப்பீட்டுச் சந்தா, வருமானவரி செலுத்துதல் மற்றும் அகில இந்திய பரஸ்பர ஏற்பாட்டுத் திட்டத்தின் படி பணத்தை இடமாற்றம் செய்தல் போன்ற துணைப் பணிகளை செய்து வருகின்றன.

**கூட்டுறவு வங்கிகள் வாடிக்கையாளருக்குச் செய்யும் சேவைகள்**

பொது மக்களிடமிருந்து பணத்தை வைப்புகளாகப் பெற்று அப்பணத்தைக் கடன் கோரும் நபர்களுக்கு அளிப்பதும் வைப்புத் தொகை மீது வாடிக்கையர் விடுக்கும் காசோலைகளை மதிப்பதுமே கூட்டுறவு வங்கிகளின் முக்கிய பணி என்றாலும், இந்நாளைய கூட்டுறவு வங்கிகள் எண்ணிலடங்கா பிற பணிகள் புரிந்து சமுதாயத்திற்குச் சேவை செய்து வருகின்றன. பணம் அனுப்புகை, பாதுகாப்புப் பெட்டக வசதி, முகமைப் பணி, பொறுப்புரிமையர், நிறைவேற்றாளர் பணி போன்ற பற்பல வசதிகள் செய்து தம்மை மேலும் பயனுடையவைகளாக ஆக்கிக் கொள்கின்றன. வைப்புகளைத் திரட்டுவதில் கடும் போட்டி நிலவும் இன்றைய உலகில் ஒவ்வொரு வங்கியும் மக்களை தம்பால் ஈர்க்க பற்பல பொதுப் பயன் பணிகளையும், முகவர் பணிகளையும் மேற்கொள்கின்றன. கூட்டுறவு வங்கிகள் தற்காலத்தில் வணிக வங்கிகளுடன் போட்டியிடும் நிலையிலுள்ளன. வைப்புகளைத் திரட்டுவதிலும், இதன் சேவைகளை செய்வதிலும் வணிக வங்கிகளுக்கு நிகராகக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன.

**சேவைகள்**

**1. காசோலை, மாற்றுச் சீட்டு பணவிடை போன்ற மாற்று முறை ஆவணங்களுக்குப் பணம் வசூலித்தல் மற்றும் செலுத்துதல்**

பொதுவாக கீறிய காசோலைக்கும் பணவிடைக்கும் எந்த வங்கியும் பணத்தை நேரிடையாக செலுத்தவில்லை. கீறிய காசோலைகளுக்குரிய பணத்தை வசூல் செய்து வாடிக்கையாளர் கணக்கில் வரவு வைக்கும் பணியினை கூட்டுறவு வங்கிகள் செய்து வருகின்றன. பணம் வசூலிப்பதிலும் செலுத்துவதிலும் ஒரு வங்கி வசூலிக்கும் வங்கியாகவும், மற்றொரு வங்கி செலுத்தும் வங்கியாகவும் செயல்படுகின்றன. இதே போன்று மாற்று சீட்டுகளுக்கும் கூட்டுறவு வங்கிகள் வாடிக்கையாளர் சார்பில் பணத்தை வசூலிக்கின்றன.

**2. ஆயுள் காப்பீட்டுக் கழக சந்தாத் தொகையினை வசூலித்தல் மற்றும் செலுத்துதல்**

பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும், ஆயுள் காப்பீட்டுக் கழகத் தவணைத் தொகையை வசூலித்து ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் கூட்டுறவு வங்கிகள் செலுத்தி வருகின்றன.

**3. அனுப்புகை வசதிகள் செய்தல்**

ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பணம் அனுப்ப மிகச்சிக்கனமான எளிய முறை வங்கிகள் மூலம் பணம் அனுப்புவதாகும். கூட்டுறவு வங்கிகளும், அனுப்புகை வசதிகளை செய்து வருகின்றன. பணம் அனுப்புவதில் கூட்டுறவு வங்கிகள் மூன்று முறைகளை கையாளுகின்றன. அவை :

- கேட்பு பணவிடை
- அஞ்சல் மாற்றம்
- தந்தி வழி என்பதாகும்

**4. பாதுகாப்புப் பெட்டக வசதி செய்து தருதல்**

கூட்டுறவு வங்கிகள் தமது வாடிக்கையாளரின் விலையுயர்ந்த நகைகளையும் மதிப்பு மிக்க பத்திரங்களையும் பாதுகாக்க தனி அறைகள் கட்டி வைத்துள்ளன. நல்ல இரும்புக் கதவுகளிட்ட இந்த அறைகள், தீ. திருடு போன்ற தீங்குகளிலிருந்து பொருட்களை காக்க உதவுகின்றன. இந்த அறைகளில் பல அளவுகளில் பெட்டகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாடிக்கையாளர் இப்பெட்டகங்களை வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம். கூட்டுறவு வங்கிகள் குறைந்த வாடகையையே வசூலித்துக் கொள்கின்றன.

**5. வணிக உறுதிக் கடிதம் வெளியிடுதல்**

வணிக மேம்பாட்டிற்கு கூட்டுறவு வங்கிகள் ஆற்றும் ஓர் பெரும் பணி உறுதிக் கடிதம் வெளியிடுவதாகும். பெரும்பாலும் மாநிலக் கூட்டுறவு வங்கி மட்டுமே இக்கடிதங்களை வெளியிடும். வாடிக்கையாளர் சார்பில் இக்கடிதம் வெளியிடப்படும், வாடிக்கையாளர் விடுக்கும் காசோலைகள் மதிக்கப்படுமென்று கடிதம் வலியுறுத்தும்.

**6. ஒப்புறுதிப் பணிகள்**

தொழில் வளர்ச்சி மிகுந்து வரும் இந்நாளில் கூட்டுறவு வங்கிகள் பலவகைகளில் தாமும் இவ்வளர்ச்சிக்கு உதவுகின்றன.சில நிறுவனங்கள் வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களை கூட்டுறவு வங்கிகள் ஒப்புறுதி செய்கின்றன. வெளியீடுகளை வாங்கி பிறருக்கு விற்பனை செய்வதால் ஒப்புறுதிக் கழிவும் கிடைக்கின்றது.

**7. பிணையங்கள் வாங்கல், விற்றல்**

பங்குகள் வாங்குவதிலும், விற்பதிலும் கூட்டுறவு வங்கிகள் ஆலோசனை வழங்குகின்றன. பிணையங்கள் வாங்கல், விற்றல் பற்றிய வாடிக்கையாளர்

உத்தரவு தெளிவாயிருக்க வேண்டும். பங்குகள், கடன் பத்திரங்கள் போன்ற பல்வேறு முதலீடுகளை வாங்கல், விற்றல், ஒப்புறுதியளித்தல் மற்றும் அவற்றைச் சார்ந்த நடவடிக்களில் ஈடுபடுதல் போன்ற பணிகளை கூட்டுறவு வங்கிகள் மேற்கொள்கின்றன.

**8. பொறுப்புரிமையர் நிறைவேற்றாளர் பணி**

வாடிக்கையரின் சார்பாக அவரது உயிலில் கண்டுள்ளபடி பொறுப்புரிமையர், நிறைவேற்றாளர் பணிகளை கூட்டுறவு வங்கிகள் மேற்கொள்கின்றன. இப்பணிகளில் நீதிமன்ற ஆணையின்படி கூட்டுறவு வங்கிகள் நடந்து கொள்ளும்.

**9. கடன்களுக்கு ஏற்பாடு செய்தல்**

தமது வாடிக்கையாளருக்கு பிற வங்கிகளிடமிருந்து கடன் பெற்று தந்தும், கடன்களுக்கு உத்திரவாதம் அளித்தும் கூட்டுறவு வங்கிகள் சேவை செய்து வருகின்றன.

**10. முகவராக பணியாற்றுதல்**

அரசு, உள்ளாட்சி நிறுவனங்கள், தனிநபர் போன்றோரின் முகவராக கூட்டுறவு வங்கிகள் பணியாற்றுகின்றன.

**11. உத்திரவாதம், இழப்பீடு தொடர்பான எல்லா நடவடிக்கைகளிலும் கூட்டுறவு வங்கிகள் ஈடுபடுகின்றன.**

**12. வாடிக்கையாளர் சார்பில் வருமானவரி கணக்குகளை முடித்துக்கொடுப்பதுடன் வருமான வரியையும் செலுத்தி வருகின்றன.**

**13. அகில இந்திய பரஸ்பர ஏற்பாட்டுத்திட்டத்தின் படி பணத்தை இடமாற்றம் செய்யும் பணிகளில் கூட்டுறவு வங்கிகள் ஈடுபட்டு வருகின்றன.**

14. இந்தியாவில் 1904 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டத்தை தொடர்ந்து பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1912ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டத்தை தொடர்ந்து பல்வேறு கூட்டுறவு வங்கிகள் தோன்றின. இவ்வங்கிகள் சங்கங்களுக்கு நிதியுதவி செய்வதற்காகவும், பொது மக்களிடமிருந்து வைப்புகளை திரட்டுவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டன. அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட வங்கிகளில்

- மாநிலக் கூட்டுறவு வங்கி
- மத்திய கூட்டுறவு வங்கி
- தொடக்கக் கூட்டுறவு
- வங்கி கூட்டுறவு நகர வங்கி
- தொடக்க வேளாண்மை கூட்டுறவு ஊரக வளர்ச்சி வங்கி
- தொழிலியல் கூட்டுறவு வங்கி

ஆகியவைகள் முக்கியமானவைகளாகும்.

**மாநிலக் கூட்டுறவு வங்கி**

இந்திய ரிசர்வ் வங்கி ஏற்படுத்தப்படாத காலத்தில் பிரதம வங்கிகளுக்கும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் நிதியுதவி செய்ய மாநில வங்கி ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டியதாயிற்று. 1912 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டம் தோன்றிய பின்னர் தமிழ்நாட்டில் சென்னை மத்திய நகர வங்கியாக இருந்த நகர வங்கி மாநிலக் கூட்டுறவு வங்கியாக மாற்றப்பட்டது. தற்பொழுது எல்லா மாநிலங்களிலும் மாநிலக் கூட்டுறவு வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாநிலக் கூட்டுறவு வங்கி ஒரு மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்தின் தலைவராகவும் கடன் இயக்கத்தின் அச்சாணியாகவும் இயங்கி வருகின்றது. மாநிலத்திலுள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளை உறுப்பினர்களாகச் சேர்த்து அவைகளுக்குத் தேவையாக நிதியுதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது.

**பணிகள்**

1. எல்லா வகையான கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிதியுதவி செய்தல்.
2. தேசிய வங்கியிடம் நிதியுதவி பெற்று அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் நிதியுதவி செய்தல்.
3. வங்கியியல் பணிகளை மேற்கொள்ளுதல்.
4. மத்திய கூட்டுறவு வங்கிகளிடையே நிதி சமப்படுத்தும் நிறுவனமாக அரசுக்கு உத்திரவாதம் அளித்தல்.
5. உறுப்பினர்களாகவுள்ள வங்கிகள் சார்பில் பாரத ஸ்டேட் வங்கிக்கும், அரசுக்கும் உத்திரவாதம் அளித்தல்.
6. புதிய கிளைகளை நிறுவுதல்.
7. மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும், இதரக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்து அவற்றின் தலைவராகச் செயல்படுதல்.

**கூட்டுறவு முயற்சி தொடக்கத்தில் தோல்வி அடைவதற்கான காரணங்கள்**

1. அங்கத்தினர்களிடையே கூட்டுறவு பற்றிய கல்வியறிவின்மை மற்றும் போதிய ஆர்வமின்மையும்.
2. அங்கத்தினர்கள் சங்கத்தின் மீது விசுவாசம் கொள்ளாதது.
3. முறையான சட்டப்பாதுகாப்பு இல்லை.
4. சங்கத்தின் நிர்வாகிகளுக்கு போதுமான மேலாண்மை, திறமையின்மை.
5. முறையான தணிக்கை இல்லை.
6. மூலதன அடிப்படையில் மட்டும் இலாபம் பகிர்ந்தளிக்கப்பட்டது. கொள்முதல் அடிப்படையில் அல்ல.

மேற்கண்ட குறைபாடுகளை அறிந்து, அதனை நீக்கும் வண்ணம் ராக்டேல்முன்னோடிகள் சங்கத்தினை அமைத்தனர்.

**வெளிநாடுகளில் கூட்டுறவு**

கூட்டுறவு எல்லா நாடுகளிலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய மற்றும் வரவேற்கத்தக்க அளவில் அரசியல் மற்றும் பொருளாதாரத்திற்கு அப்பாற்பட்ட உறுதியான கோட்பாடாக அமைந்ததால் பலவகைக் கூட்டுறவுகள் எல்லா நாடுகளிலும் ஏற்படுத்தப்பட்டன. சில நாடுகளில் ஒரு குறிப்பிட்ட வகை கூட்டுறவுகள் அதிக அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இங்கிலாந்தில் நுகர்வோர் கூட்டுறவுகள் பிரசித்தி பெற்றதாகவும் மற்றும் மிக வெற்றிகரமானதாகவும் உள்ளது. கூட்டுறவு வங்கி மற்றும் கடன் கூட்டுறவுகள் ஆகியவை வெற்றிகரமாக செயல்பட்டு வருவதற்கு ஜெர்மனி ஒரு முன் உதாரணமாக உள்ளது. ரெய்பீசன் மற்றும் சூல் டெலீசு கூட்டுறவுகள் அங்கு சிறப்பாக அமைந்தன.

இத்தாலி நாட்டில் பணியாளர் ஒப்பந்த சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் முதன்மை பெற்று வெற்றிகரமான செயல்படுகின்றன. உலக அளவில் டென்மார்க்கு பால்வள கூட்டுறவு முன்மாதிரியாக சிறந்த அளவில் செயல்பட்டு வருகின்றது. பாலாடைக்கட்டி, பன்றி வளர்ப்பு மற்றும் முட்டை ஏற்றுமதியில் வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றது. சுவீடனில் நுகர்வோர் பண்டக சாலையும், ஜப்பானில் நுகர்வோர் பண்டக சாலை மற்றும் மீன்பிடி சங்கங்களும், அமெரிக்கா மற்றும் கனடாவும் சந்தையிடுகை கூட்டுறவில் சிறந்து விளங்குகின்றன. இந்தியாவில் அதிக அளவிலான பல்வகை கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. வேளாண் சங்கங்கள் அதிக அளவில் பிரசித்தி பெற்று உள்ளன.

**வரையரைகள் (Definition)**

கூட்டுறவிற்கு பல வரையரைகள் உள்ளன. அவைகளில் எந்த ஒன்றினையும் குறிப்பிட்டு இதுதான் சிறந்தது, முடிவானது எனக் கூற இயலாது. ஒவ்வொரு வரையரையும் கூட்டுறவின் சில முக்கியக் கூறுகளை முதன்மைப்படுத்திக் காட்டும்.

ஒலியோக் என்பவர் கூட்டுறவினை, அமைப்பில் உள்ள அனைவரும் சமமாக பங்கேற்று, அனைவர் கட்டுப்பாட்டிற்கும், உட்பட்ட ஒரு தன்னிச்சையான முயற்சியே' என வரையரை செய்துள்ளார்.

ஒரேசு பிளங்கட் என்பவர், சுயமுயற்சி அமைப்பின் மூலம் வலுப்படுத்தப்படுவதே கூட்டுறவு எனக் கூறுகிறார்.

டாக்டர் சாகீர் உசேன், 'தனியார் துறை மற்றும் பொதுத்துறைக்கு இடைப்பட்டு, தனக்கென நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு ஒரு தனியான பங்கினை ஏற்றுள்ளது' என கூறுயுள்ளார்.

SURA'S

டாக்டர். மிளாடெனாட்சு என்பவர், 'கூட்டுறவு என்பது சில பொது பயன்பாடுகளை பரஸ்பர சேவை மூலம், நபர்கள் தன்னிச்சையாக ஒன்று சேர்ந்து, பொது இடர்பாடுகளை ஏற்று, மூலதனமிட்டு நடத்தும் ஒரு கூட்டு பொருளாதார அமைப்பு எனக் கூறுகிறார்.

பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு (ஐ.எல்.ஓ) கூட்டுறவு என்பதனை, குறைந்த வசதி பெற்றோர், தன்னிச்சையாக ஒன்று சேர்ந்து, ஜனநாயக முறை அமைப்பாக மூலதனத்தை சமநிலையில் அளிப்பதோடு, இடர்பாடுகளையும், நன்மைகளையும் நியாயமான முறையில் தங்களிடையே பிரித்துக்கொள்ளும் அமைப்பு என வரையறை செய்துள்ளது.

**கூட்டுறவின் சிறப்பியல்புகள் (Features)**

**தனிச்சிறப்புகள்**

கூட்டுறவு அமைப்புகள் மற்ற அமைப்புகளிலிருந்து பல வகையிலும் தனிச்சிறப்புமிக்க ஒன்றாகும். அவைகளாவன

1. கூட்டுறவு அமைப்புகள் தனி நபர்களின் கூட்டமைப்பே ஒழிய முதலீட்டை அடிப்படையாகக் கொண்டதன்று. கூட்டுறவு அமைப்புகளில் மனித நேயம் தலையாயதொன்றாகும்.
2. கூட்டுறவு அமைப்புகளில் தகுதி பெற்று எந்த ஒரு நபரும் உறுப்பினராகலாம். எனினும் அவர் அச்சங்கத்தின் பணிகளோடு தொடர்புடையவராக இருத்தல் வேண்டும். சாதி, சமயம், நிறம், அரசியல், சார்பு, கருதி ஒரு நபருக்கு அங்கத்தினராகும் தகுதி இல்லையென்று கூற இயலாது. எனினும் சங்க நலனுக்கப் புறம்பாக செயல்படும் நபரை உறுப்பினராக்க வேண்டுவது இல்லை. உதாரணமாக வட்டிக்கடைக்காரரை கூட்டுறவுக்கடன் சங்கத்திலும் நெசவுத் தொழில் முதலாளிகளை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் உறுப்பினராக வேண்டுவதில்லை.
3. கூட்டுறவு சங்கங்கள் தன்னிச்சையாக அமைவதாகும். எந்த ஒரு நபரையும் கூட்டுறவு சங்கங்களில் வற்புறுத்தி சேர்த்தல் கூடாது. கூட்டுறவு என்பது வற்புறுத்தி இணங்க வைப்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகும்.
4. கூட்டுறவு சங்கங்களில் எல்லா உறுப்பினர்களும் சமமானவரே. சங்கத்தின் சேவையைப் பெறுவதற்கு எல்லா உறுப்பினர்களுக்கும் சரிநிகர் உரிமை உண்டு. ஒரு உறுப்பினரின் பங்குத்தொகையையோ அவரின் சமூக நிலையையோ செல்வ நிலையையோ அடிப்படையாகக் கொண்டு வேறுபடுத்திக் காண்பதில்லை.
5. முதலீடு என்பது முதன்மையாக கருதப்படுவது இல்லை. எனவே தான் பங்குத் தொகைக்கு வழங்கப்படும் வட்டி வரையறுக்கப்பட்டதாகும்.
6. கூட்டுறவு அமைப்புகள் குடியாட்சி முறையில் நிர்வகிக்கப்படுகிறது. ஒரு உறுப்பினர் எத்தனை பங்குத்தொகைகள் கொண்டிருப்பினும் ஒரு வாக்குக்கு மட்டுமே தகுதியுடையவராவர். 'ஒரு உறுப்பினர் ஒரு வாக்கு' என்பது கூட்டுறவின் சிறப்புமிக்க கொள்கையாகும்.
7. கூட்டுறவு சங்கங்களின் பேரவை முழு அதிகாரம் கொண்டிருக்கும் சங்கங்களின் எல்லாவித முடிவுகளையும் இறுதியாக நிர்ணயிப்பது இப்பேரவையாகும். பேரவையால் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகக் குழுவிலும் பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்துக்களே முடிவாகக் கருதப்படும். பேரவையை பொதுக்குழு எனவும் குறிப்பிடலாம்.
8. சங்கம் ஈட்டும் உபரித் தொகையில் சங்க உறுப்பினர்கள் அவரவர் வியாபாரத்தில் பங்கெடுத்துக் கொண்ட விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.
9. கூட்டுறவு அமைப்புகள் இலாபம் ஈட்டுவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. உண்மையில் அவை சேவை நோக்கம் உடையவையாகும். இதனால், கூட்டுறவு சங்கங்கள் நட்டத்தில் செயல்படவேண்டுமென்று பொருள் இல்லை. கூட்டுறவு சங்கங்களில் நிலைத்த செயல்பாட்டிற்கும் முறையான வளர்ச்சிக்கும் உரிய இலாபம் ஈட்டுவது அவசியமானது ஒன்றாகும். எனினும், இலாபம் ஈட்ட கூட்டுறவு அமைப்புகள் தவறான உத்திகளைப் பயன்படுத்தக்கூடாது.
10. சேமிப்பு, சிக்கனம் என்று இரண்டும் கூட்டுறவின் அடிப்படைக் கூறுகளாகும். கூட்டுறவு என்பது நற்பண்புகளை வளர்க்கும் ஒரு இயக்கமாகும். உறுப்பினர்கள் எளிமையாக வெளிப்படையாக வாழ்க்கையை வாழ ஊக்குவிக்கப்படுவர். பல கூட்டுறவு சங்கங்களிலும் சேமிப்பு நிதி தொடங்கப்பட்டு உறுப்பினர்களின் எதிர்பார்ப்புத் தேவையை நிறைவு செய்யப் பயன்படுத்தப்படுகிறது.

**கூட்டுறவும் ஏனைய அமைப்புகளும்**

கூட்டு நடவடிக்கை என்ற தத்துவத்தில், ஆக்கப்பூர்வமான ஒற்றுமை அமைப்பே கூட்டுறவு ஆகும். நலிவுற்றோர்கள், அனைவரும் சமம் என்ற அடிப்படையில் அங்கத்தினர்களின் பொதுத் தேவைகளை, கூட்டு செய்கை மூலம் பூர்த்தி செய்து கொள்வது கூட்டுறவாகும். கூட்டுறவின் வெற்றி, அங்கத்தினர்களின் கூட்டுறவு உணர்வினைப் பொருத்து அமையும். ஒரு கூட்டுறவு சங்கம் அடிப்படையில் பொருளாதார சமூக குறிக்கோளுடைய அமைப்பாகும்.

**பொருளாதார கூறுகள் (Economic System)**

கூட்டுறவு சங்கங்களில், குறைந்த வசதி படைத்தவர்கள், செல்வந்தர்கள் பெறக்கூடிய வசதிகளை, ஒன்று சேர்ந்து கூட்டு முயற்சியால் பெருகின்றனர். பொதுவான பொருளாதாரத் தேவையை பூர்த்தி செய்தல் என்பது கூட்டுறவின் அடிப்படை நோக்கம். கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள், தன் அங்கத்தினர்களுக்கு நியாய வட்டியில் உற்பத்திக்கு கடன் அளிக்கிறது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் நுகர்வோர் பொருட்களை நியாய விலையில் விற்கின்றன.

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் அங்கத்தினரின் பொருளாதார மேம்பாட்டிற்குப் பாடுபடுகின்றது. மற்றவர்களை சுரண்டல் செய்வது என்பது அதன் குறிக்கோள் கிடையாது. கூட்டுறவு சங்கங்கள் தங்கள் குறிக்கோள்களை கடின உழைப்பு, திறமை, இடைத்தரகர்கள் நீக்கம், நியாய முறைகள், நியாயப் பகிர்வு ஆகியவைகள் மூலம் அடைகின்றன. ஒரு கூட்டுறவுச் சங்கம் அங்கத்தினர்களின் பொருளாதார மேம்பாட்டை அவர்கள் முயற்சி மூலமே பெற உதவுகின்றது.

கூட்டுறவுச் சங்கங்கள் இடைத்தரகர்களை நீக்கி, உற்பத்தியாளரை நுகர்வோருடன் நேரடித்தொடர்பு கொண்டு வருகின்றன. உற்பத்தியாளர்களுக்கு சற்று அதிகமான விலையும், நுகர்வோர்களுக்கு சற்று குறைந்த விலையிலும் பொருட்கள் கிடைக்கின்றன. இருவரும் பயன் பெறுகின்றனர்.

முதலாளித்துவ அமைப்பில் முற்றுரிமை, மற்றும் உற்பத்தியாளர்கள் கூட்டு முயற்சிகள் மூலம் நுகர்வோர்கள் பாதிக்கப்படுகின்றனர். உற்பத்தியாளர்கள் உற்பத்தியைக் குறைத்து, விலையை அதிகரித்து, சமுதாய நலனுக்கு எதிராக மிகுந்த இலாபம் பெரும் உத்திகளைக் கையாளுவார்கள். கூட்டுறவு, அங்கத்தினர்கள் நன்மையை முதன்மையாக எடுத்து, வணிகர்களின் மோசடி நடவடிக்கைகள் மற்றும் கலப்படம் ஆகியவைகளை எதிர்ப்பதோடு, நியாயமான அளவில் தரமான பொருட்கள் கிடைக்க உதவுகின்றது.

**சமுதாயக் கூறுகள் (Social System)**

கூட்டுறவு தன் அங்கத்தினர்கள் பொருளாதார மேம்பாட்டுடன் சமுதாய நல்வாழ்விலும் அக்கரை கொண்டுள்ளது. கூட்டுறவின் தத்துவம் 'ஒவ்வொருவரும் அனைவருக்காக, அனைவரும் ஒவ்வொருவருக்காக' என்பதாகும். தனியார் சுதந்திரம், சமுதாய சுதந்திரத்தைப் பாதிக்காத வண்ணம் கூட்டுறவின் கோட்பாடு அமைந்துள்ளது. அங்கத்தினர்களுக்கு மட்டுமல்லாமல் பொதுமக்கள், பொருள் அளிப்பவர்கள், பணியாளர்கள் அனைவரின் நல்வாழ்வையும் கூட்டுறவு தன்னுடன் கொண்டுள்ளது. மனிதாபிமானம், சமுதாய நல்வாழ்வு ஆகியவை கூட்டுறவின் அடிப்படை விருப்பங்களாகும்.

கூட்டுறவு என்பது கூட்டு முயற்சி அங்கத்தினர்களிடையே நல்லெண்ணம், பரஸ்பர உதவி மூலம் நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. நம்பிக்கை மற்றும் மன உறுதியினை கூட்டுறவு அளிக்கிறது. கூட்டுறவு தலைமைப் பொறுப்பு அளித்து தலைவர்களை உருவாக்குகின்றது.

'ஒரு அங்கத்தினர் ஒரு வாக்கு' என்ற சீரிய கோட்பாட்டின்படி கூட்டுறவு சங்கங்கள் ஜனநாயக அமைப்புகளாகும். இந்தியா போன்ற

ஜனநாயக நாட்டில், ஜனநாயக பண்பு வளர்க்க கூட்டுறவு பயன்படுகிறது. கூட்டுறவு சமுதாய அமைப்பினை சிறப்புறச் செய்து சமுதாய வாழ்வை செம்மையாக்குகின்றது.

**நல் ஒழுக்கக்கூறுகள் (Moral Values)**

கூட்டுறவு ஒரு வாணிப அமைப்பின்றி, நல் ஒழுக்க இயக்கமாகவும் செயல்படுகின்றது. ஒரு கூட்டுறவு சங்கத்தின் வெற்றி அந்த அங்கத்தினர்கள் ஒழுக்கத்தினையே பொருத்தாகும். உடன் பிறப்பு உணர்வு, பரந்த நோக்கு, அன்பு, தியாகம் அனைத்தும் கூட்டுறவின் எண்ணப் பிரதிபலிப்புகளே, குழு நோக்குடன் அனைவருக்காகவும் பணி செய்யும். எண்ணம், வாக்கு, செயல் அனைத்திலும் நேர்மையை ஏற்படுத்துகிறது.

சட்டத்திற்குப் புறம்பாக, நன் நடத்தைக்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுவதில்லை. கலப்படம், எடை மற்றும் அளவுகளில் மோசடி செய்வது, பதுக்கல், கள்ளச் சந்தை ஆகியவைகளை எதிர்ப்பது கூட்டுறவின் கோட்பாடாகும். சிக்கனம், சேமிப்பு, எளிமையான வாழ்க்கை, ஆடம்பரத்தை எதிர்த்தல் அனைத்தும் கூட்டுறவின் நல் ஒழுக்கக் கூறுகளாகும்.

**கல்விக் கூறுகள்**

கூட்டுறவின் மறு பக்கம் கல்வி மேம்பாடு, ராக்டேல் முன்னோடிகளே கல்வி வளர்ச்சியை கூட்டுறவின் தத்துவமாக கருதினர். அங்கத்தினர்களுக்கு கல்வி, இயக்குனர் குழு அங்கத்தினர்களுக்கு கல்வி, பணியாளர்களுக்கும் கல்வி இவை அனைத்தும் கூட்டுறவுக் கல்வியில் உட்படும். பொதுக்கல்வியும், கூட்டுறவு பற்றிய கல்வியும் அளிக்கப்படும்.

**முதலாளித்துவம் (Capitalism)**

வாணிபம் மற்றும் தொழிற்சாலைகள் லாப நோக்கோடு தனியார் துறையில், அரசின் குறைந்த பட்ச குறுக்கீட்டுடன் நடத்தப்படும் பொருளாதார அமைப்பே முதலாளித்துவமாகும். மூலதனம் தனிநபர்களால் லாப நோக்கோடு முதலீடு செய்யப்படும். முதலீடு செய்தவர்கள் ஆலை அல்லது பண்ணைகளில் தொழிலாளர்களை பணி செய்ய வைத்து கூலி அளிப்பர்.

தொழிற்புரட்சி காரணமாக முதலாளித்துவம் தோன்றியது. சொத்துக்களை உரிமையாக்கிக் கொள்வது. பொருட்களுக்கு உரிமை பெறுவது என்பன முதலாளித்துவ அடிப்படைகள். சந்ததிகளுக்கு சொத்துரிமை. தொழில் நடத்தும் சுதந்திரம், தனி லாபம் பெற ஒப்பந்தங்கள். போட்டி சந்தை ஆகியவைகளை முதலாளித்துவம் ஏற்கின்றது.

**முதலாளித்துவத்தின் சிறப்பியல்புகள்**

1. தனியார் சொத்துரிமை
2. இலாப நோக்கு
3. பொருளாதார சுதந்திரம்
4. முழு நிறைவுப் போட்டி
5. நுகர்வோரின் தனிஉரிமைகள்
6. விலைக் கோட்பாடு
7. முதலாளிகள் மற்றும் தொழிலாளர்கள் என இரு கூறுகள்
8. அரசின் பங்கு

**முதலாளித்துவத்தின் நன்மைகள்**

1. தனியார் சொத்துரிமை மற்றும் தனியார் லாபம் பல தொழிற்சாலைகளும் வாணிபமும் தோன்றவும், வளரவும் வித்திடுகிறது. மூலதன தொழிற்சாலைகள் மற்றும் நுகர்வோர் தொழிற்சாலைகள் விரிவாக்கப்பட்டு தேசிய வருவாய் உயருகின்றது. முயற்சியும், மன உறுதியும் உள்ள தனியார்கள் தங்கள் மூலதனத்தை அதிகரித்து தொழிலை வளர்க்க முடியும். தனியார் லாபம் பெறலாம் என்ற கோட்பாடு மகிழ்ச்சியுடன் வாணிப பெருக்கம் செய்ய உதவுகின்றது.
2. முதலாளித்துவத்தில் தடையில்லா போட்டி அனுமதிக்கப்படுகின்றது. போட்டி சந்தையில் தனி மனிதன் முயற்சிக்கேற்ப வெற்றி கிடைக்கும்.
3. தடையில்லா போட்டியும், சந்தை விலை முடிவும், விலைகளை நிரந்தரப்படுத்த வகை செய்கிறது. விலையும் ஏற்புடைய நிலையில் அமையும்.
4. ஒவ்வொரு உற்பத்தியாளரும் தரத்தினை உயர்த்துவதோடு, புதிய தொழில் நுணுக்கங்கள் மூலம் குறைந்த விலையில் புதுப்பொருட்களை உருவாக்குகிறார்கள். போட்டியை சமாளிக்க இயலாத, தரம் குறைந்த உற்பத்தியாளர்கள் சந்தையை விட்டு விலக்கப்படுவர்.
5. நுகர்வோர்களே அரசர்கள் என்பது போல நுகர்வோர் விருப்பத்திற்கே பொருள் உற்பத்தி செய்யப்படும்.

**முதலாளித்துவத்தின் குறைபாடுகள்**

1. இலாப நோக்கே முதலிடம் பெறுவதால் தனியார்கள் சமுதாயத்தில் அக்கறை காட்டுவதில்லை.
2. தடையில்லா போட்டியின் காரணமாக சில துறைகளில் தேவைக்கு அதிகமான உற்பத்தியும், உற்பத்திக் காரணிகளை பயனபடுத்துவதில் விரயமும் ஏற்படலாம்.
3. முற்றுரிமையை தோற்றுவிக்கும், பணக்குவியலை ஏற்படுத்தும்.
4. முதலாளிகள், தொழிலாளிகள் என எதிரும் புதிருமான இரண்டு வர்க்கங்கள் ஏற்படுகின்றன.
5. பணக்காரர்களும், ஏழைகளுக்குமிடையே இருக்கும் இடைவெளி பெரிதாகின்றது.
6. தேவை, அளிப்பிற்கு இடையே சமனின்மை ஏற்படுகின்றது.
7. மனித நேயம் புறக்கணிக்கப்படுகின்றது.

**கூட்டுறவின் கூறுகள்**

1. கூட்டுறவு மனிதர்களின் சேர்க்கை.
2. நியாய அடிப்படை.
3. தடையில்லா திறந்த அங்கத்தினர் சேர்க்கை.
4. ஜனநாயக அமைப்பு.
5. ஒற்றுமை மற்றும் உடன்பிறப்பு உணர்வு.
6. சிக்கனம்.
7. மத மற்றும் அரசியல் நடுநிலைமை.
8. தன் இச்சை சேர்ப்பு.
9. நியாயப் பங்கீடு.

**முதலாளித்துவம் மற்றும் கூட்டுறவு - ஒப்பீடு ஒற்றுமைகள்**

1. கூட்டுறவு மற்றும் முதலாளித்துவம் ஆகிய இரு பொருளாதார அமைப்புகளும் தனியார் சொத்துரிமை மற்றும் சொத்துக்களில் வாரிசு உரிமை என்பதனை ஏற்றுக் கொள்கின்றன.
2. முதலாளித்துவம் போல கூட்டுறவும் உற்பத்திக்கு மூலதனம் தேவை என்பதை ஏற்கின்றது. ஆனால், கூட்டுறவில் மூலதனத்தின் மீது வட்டி வரையறுக்கப்பட்டிருக்கும்.
3. அரசு வாணிபத்தில் குறுக்கீடு செய்வதை முதலாளித்துவமும், கூட்டுறவும் எதிர்க்கின்றன.
4. திறமையின் அவசியத்தை முதலாளித்துவமும், கூட்டுறவும் வலியுறுத்துகின்றன.

**வேற்றுமைகள்**

1. முதலாளித்துவத்தில் மூலதனம் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. முதலாளித்துவ நிறுவனம் மூலதனத்தின் கூட்டேயாகும். ஆனால் கூட்டுறவு என்பது நபர்களின் கூட்டாகும். பணத்தைவிட மனிதர்களே கூட்டுறவில் முக்கிய அங்கமாக கருதப்படுவர்.
2. முதலாளித்துவத்தில், மூலதனத்தில் முதலீடு செய்யக் காரணம் அதிக லாபநோக்கே ஆகும். ஆனால் கூட்டுறவில் அங்கத்தினர் மூலதனம் எடுத்துக்கொள்வது சங்கமளிக்கும் பொருளாதார சேவையைப் பெறவேயாகும்.
3. முதலாளித்துவ அமைப்பில், கூலி, வாடகை, நிர்வாகச் செலவு போக எஞ்சிய லாபம் அனைத்தும் முதலாளிக்கு சாரும். கூட்டுறவில் முதல்மீது வரையறுக்கப்பட்ட வட்டியே அளிக்கப்படும்.
4. முதலாளித்துவ நிறுவனங்கள் பங்குதாரர்களின் நன்மை, இலாபம், ஆகியவைகளை மனதில் கொண்டே செயல்படும். ஆனால் கூட்டுறவுச்

சங்கங்கள் அங்கத்தினர்கள் நலம் மட்டும் அல்லாமல் நுகர்வோர் பொதுமக்கள் நலனையும் மனதில் கொண்டு செயல்படும்.

5. முதலாளித்துவம் பணக்குவியல் மற்றும் முற்றுரிமைக்கு வகை செய்யும். ஆனால் கூட்டுறவில் அதிகாரப் பரவல் இருக்கும்.
6. கூட்டுறவில் 'ஒரு அங்கத்தினருக்கு ஒரு வாக்கு' என்ற கோட்பாடு செயல்படுகிறது. நிறுமங்களில் பங்குகள் எண்ணிக்கை ஏற்ப வாக்கு உரிம அமையும்.
7. முதலாளித்துவுத்தின் அடிப்படை சுய உதவி, கூட்டுறவின் அடிப்படை சுய உதவி மற்றும் பரஸ்பர உதவி.
8. முதலாளித்துவத்தினால் பணவீக்கமும், பணவாட்டமும் அவ்வப்போது ஏற்படுகின்றது. இது முதலாளித்துவம் வித்திடுவதில்லை. எனவே கூட்டுறவு விலைகளை நிலைப்படுத்த பயன்படுகின்றது.

### சமதர்மம் (Socialism)

நாட்டின் உற்பத்திக் காரணிகள் அனைத்தையும் அரசே உடமைபெற்று, அரசின் கட்டுப்பாட்டில் மக்கள் நலனுக்காக செயல்படுத்த வேண்டும் என்பதே சமதர்மம் அல்லது சோசலிசம் ஆகும்.

**பல வகைகள்**

1. மார்க்கீசிய சமதர்மம்
2. அரசு சோசலிசம்
3. கில்டு சோசலிசம்
4. சின்டிகாலிச சோசலிசம்
5. புரட்சி சோசலிசம்
6. ஃபேபியன் சோசலிசம்

**மார்க்கீசிய சமதர்மம்**

காரல் மார்க்ஸ் என்ற தத்துவ ஞானியின் சமதர்ம படைப்பே மார்க்கீசிய சமதர்மம் ஆகும். அனைத்துப் போர்கள், கலவரங்கள், அரசியல் இயக்கங்கள் ஆகியவைகளின் தோற்ற அடிப்படை பொருளாதாரக் காரணிகள் ஆகும். முதலாளித்துவத்தில் செல்வம் சிலர் கைகளில் குவிந்து முற்றுரிமை அமைகின்றது. முதலாளித்துவம் வர்க்கப் போராட்டத்தில் முடியும். உழைப்பவனுக்கு கூலிதான் கிடைக்கின்றது. முதலாளிக்கோ உபரி லாபம் கிடைக்கின்றது. தொழிலாளிக்கு கிடைக்கவேண்டியதை முதலாளிகள் கொள்ளை அடிக்கின்றனர் என்பது மார்க்கீசிய தோற்றம்.

**அரசு சோசலிசம்**

சட்டமுறையில் அனைத்து தொழிலகங்களும் அரசுடமையாக்கப்பட்டு, உற்பத்திக் காரணிகள் அரசிடம் ஒப்படைக்க வேண்டும். அரசு உற்பத்தி, விநியோகம் ஏற்று மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

**கில்டு சோசலிசம்**

உற்பத்தி தொழில் அனைத்தும் தொழிலாளர்களின் கில்டு அமைப்பால் நிர்வகிக்கப்படல் வேண்டும். அரசு தொழிற்சாலையை கில்டு மூலம் நடத்துவதே கில்டு சோசலிசம் ஆகும்.

**சின்டி காலிச சோசலிசம்**

அரசு அதிகாரிகள் கையில் ஒப்படைக்காமல், தொழிற்சங்கங்கள் கட்டுப்பாட்டில் தொழிற்சாலைகளும், தொழிலும் அமைக்கப்பட வேண்டும் என்பதே சின்டிகாலிசம்.

**புரட்சி சோசலிசம்**

சோசலிசம் தானாக மலர பல ஆண்டுகள் பிடிக்கும். எனவே உடனடியாக சமதர்மத்தை நிலைநிறுத்த புரட்சி தேவை. புரட்சி மூலம் சோசலிசம் அமைப்பது மக்கள் நலன் கருதியே என புரட்சி சோசலிசவாதிகள் கருதுகின்றனர்.

**ஃபேபியன் சமதர்மம்**

பிரச்சாரம் மூலம் மக்களுக்கு சமர்தர்ம நன்மைகளை விளக்கி சமர்தர்ம சமுதாயம் அமைப்பது ஃபேபியன் சமர்தர்மம் வரவேற்கிறது.

**சமதர்மத்தின் கூறுகள்**

1. உற்பத்திக்கான காரணிகள் நிலம், தொழிற்சாலைகள், சுரங்கங்கள், அனைத்தும் அரசுடைமையாக்கப்பட்டு அரசுக்கோ, அரசு அமைத்துள்ள முகமைக்கோ மாற்றம் செய்தல்.
2. தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி இல்லை. உற்பத்தி அரசினால் கட்டுப்படுத்தப்படும்.
3. கூலி நிர்ணயம், ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் ஒரு கட்டுப்பாட்டு குழுமம் மூலம் செய்யப்படும்.
4. ஒவ்வொருவருக்கும் வேலை அளிப்பது அரசின் கடமை
5. ஒரு நபரின் வருமானம் அவர் பெரும் கூலி மட்டுமே
6. முதலாளியின் பணிகள் அனைத்தும் செய்யும் நிலச் சுவான்தார், தொழிலதிபர் என்ற முறையில் வாடகை, இலாபம், அனைத்தும் அரசுக்கே போகும்.
7. அரசுக்கு கிடைக்கும் லாபம், கல்வி, மருத்துவம், சமுதாய நன்மைகளுக்காகச் செலவிடப்படும்.

**சுருங்கக் கூறின் சமர்தர்மத்தின் கூறுகளாவன**

1. ஒட்டுமொத்த உரிமை
2. வரையறுக்கப்பட்ட சமுதாய பொருளாதாரக் குறிக்கோள்கள்
3. மைய பொருளாதார திட்டம்
4. பொருளாதார சமத்துவம்
5. சம வாய்ப்பு
6. உற்பத்திக் காரணிகளை சிறப்பாக பயன்படுத்துவது
7. வேலையின்மையை அறவே நீக்குதல்
8. இலாபம் அரசுக்கே சொந்தம்

**சமர்தர்மத்தின் நன்மைகள்**

1. ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு அளிக்கப்படுவதால் தங்கள் திறமையை உயர்த்திக்கொள்ள வாய்ப்பு கிடைக்கிறது.

2. ஒரு தொழிற்சாலை மட்டுமின்றி பல தொழிற்சாலைகளுக்கு இடையேயும் கூலி நிர்ணயத்தல் பெருத்த வேறுபாடு இருக்காது.

3. தொழிற்சாலையின் லாபம் அரசைச் சாரும்

4. திறமையான திட்டத்தின் மூலம் உற்பத்திக் காரணிகளை முழுமையாகப் பயன்படுத்தலாம்.

5. மக்கள் நல வாழ்வும், மக்கள் வாழ்க்கைத்தர உயர்வும் அரசே கண்காணிக்கப்படுகிறது.

**குறைபாடுகள்**

1. தனிப்பட்ட நபர்களுக்கு சொத்து உரிமையோ, லாபங்களோ இல்லாததால் தனி நபர்களுக்கு உற்பத்தி அதிகரிக்க வேண்டும் என்ற ஊக்கம் இருக்காது.
2. அரசு அதிகாரிகளின் மெத்தனப் போக்கும், அதிகார ஆணவமும் மிகுந்திருக்கும்.
3. அளிப்பு மற்றும் தேவை சமனற்ற நிலையில் இருக்கும்.
4. தன் விருப்பத் தொழிலை தேர்ந்தெடுக்கும் உரிமை தொழிலாளிகளுக்கு இல்லை.
5. அடிப்படை மனித உரிமை இழக்கப்படுகிறது. வாழ்க்கை ஒரு இயந்திரம் போல் அமையும்
6. நுகர்வோரின் தேவை மற்றும் விருப்புக்களை திட்டமிடுபவர்கள் முன்னுரிமை கொடுத்து செயலில் ஈடுபடமாட்டார்கள்.

**கூட்டுறவு - சமர்தர்மம் ஒப்பீடு**

**ஒற்றுமைகள்**

1. கூட்டுறவு இயக்கம் மற்றும் சமதர்மம் ஆகிய இரண்டுமே சமுதாயப் பொருளாதார இயக்கங்களாகும். இவை இரண்டுமே முதலாளித்துவத்திலுள்ள பெரும் குறைபாடுகளுக்கு எதிராக தோன்றிய இயக்கங்கள். லாப நோக்கினை, சேவை நோக்கினால் மாற்றுவதையே இரு சித்தாந்தங்களும் அடிப்படை நோக்காகப் பெற்றுள்ளன.
2. இரண்டு அமைப்புக்களுமே ஒட்டுமொத்த இணைப்பின் மூலம் மக்கள் நலனை காக்க முற்படுகின்றன.
3. முதலாளித்துவத்தின் சுறண்டல், வறியவர்களை வாட்டுதல் ஆகியவைகளை எதிர்ப்பதே சமதர்மம் மற்றும் கூட்டுறவின் குறிக்கோள்கள் ஆகும்.

4. சமுதாய சேவை என்பது சமதர்மம் மற்றும் கூட்டுறவிற்கும் மிகவும் ஏற்புடையது.

**வேற்றுமைகள்**

1. சமதர்மம் தனியார் சொத்துரிமையை ஏற்பதில்லை. கூட்டுறவு தனியார் சொத்துரிமையை ஏற்கிறது.
2. சமதர்மத்தில் அனைத்துச் செயலும் சமுதாய நன்மை அடிப்படையிலேயே இருக்கும். தனி நபர் முன்னேற்றம் என்பது கிடையாது. ஆனால் கூட்டுறவு தன்னிச்சையான அமைப்பு என்பதோடு ஒவ்வொருவரும் அனைவருக்காக அனைவரும் ஒவ்வொருவருக்காக என்ற அடிப்படையில் அமையும்.
3. சமதர்மப் பொருளாதாரம் என்பது தொழிலாளர்கள் பொருளாதார அமைப்பு ஆகும். கூட்டுறவில் தொழில் அல்லது உழைப்பு என்பது ஒரு உற்பத்திக் காரணியாகவே கருதப்படுகிறது.
4. சமதர்மத்தில் அரசு என்ற அமைப்பே வலுவான அனைத்து விவகாரங்களிலும் இறுதி முடிவு அரசு முடிவு ஆகும். கூட்டுறவில் அரசு அதன் செயல்பாட்டில் குறுக்கீடு செய்யக்கூடாது என்ற கோட்பாட்டை உடையது.
5. சமதர்மம் குறிக்கோள்களை அடைய கட்டாயப்படுத்துகிறது. கூட்டுறவில் கட்டாயப்படுத்தவது என்பதில்லை. தன்னிச்சையாக அமைப்பு, விருப்பமுடையவர்கள் மட்டும் சேர்ந்து பயன் பெறலாம்.
6. சமதர்ம அமைப்பில் லாபம் அரசுக்கே உரிமை. ஆனால் கூட்டுறவில் உபரி லாபம் இருக்குமேயானால் அது அங்கத்தினர்களுக்கு, அவர்கள் சங்கத்திற்கு அளித்த வாணிபத்தில் அடிப்படையில் பகிர்ந்து அளிக்கப்படும்.
7. சமதர்மத்தில் பொருளாதார, அரசியல் முடிவுகளும் குவியலும் அரசுடன் இருக்கும். தவிர கூட்டுறவில் அதிகாரப் பரவல் உண்டே தவிர அதிகாரக் குவியல் கிடையாது.

கூட்டுறவிற்கும், சமதர்மத்திற்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. அதே போல் கூட்டுறவு மற்றும் சமதர்மத்திற்கும் பல வேறுபாடுகளும் உள்ளன.

**ஆரம்ப முயற்சிகள் (Classical thoughts of Co-operation):**

ராக்டேல் கூட்டுறவு சங்கம் தொடங்கியதன் பின்னணியை ஆய்வு செய்தல் வேண்டும். சங்கத்தினர்கள் அனைவரும் அமைதியுடன், போட்டி உலகில் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள, சுய ஆதரவுக் குழுக்களை ஏற்படுத்தும் முயற்சி 17 ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கியது. பி.சி. பிளாக், சான்பெல்லார்ச், போன்றவர்கள் விவசாயிகள், தொழிலாளிகள் ஒன்று சேர்ந்து தன்னிச்சையான பொருளாதார மேம்பாட்டு அமைப்பினை ஏற்படுத்தும் எண்ணத்தினை உருவாக்கினர். அவர்கள் தங்கள் எண்ணங்களுக்கு எழுத்து வடிவம் அளித்து, கையேடுகளாகவும், பிரசுர துண்டுகளாகவும் வெளியிட்டனர். இவை ராபர்ட் ஓவனைக் கவர்ந்தது.

இராபர்ட் ஓவன் என்பவர் இங்கிலாந்து நாட்டில் நியூடன் என்ற இடத்தில் சிறிய கடை உரிமையாளரின் மகனாவார். சாதாரண சூழ்நிலையில் பிறந்த அவர், கடுமையான உழைப்பின்மூலம் தன் 19வது வயதில் ஒரு துணி உற்பத்தி ஆலைக்கு மேலாளராக்கப்பட்டார். 21வது வயதில் சில ஆலைகளுக்கு, கூட்டாளியாக உரிமையாளரானார். தொழிலாளிகளின் இடர்பாடுகளைக் கண்டு மனம் வருந்தினார். இயந்திரங்கள், அதில் வேலை செய்யும் தொழிலாளர்களைவிட உயர்வாக மதிக்கப்படுவதை, போற்றப்படுவதைக் கண்டு துயருற்றார். தன் தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் வேலை நேரத்தினை 17 மணியிலிருந்து 10 மணியாகக் குறைத்தார். அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த விரும்பினார். அவர்களுக்கு வேலை நேர இடைவேளையில் உணவினை நியாயவிலையில் அளிப்பதோடு அவர்களின் குழந்தைகளுக்கு கல்வி கற்க வழிவகுத்தார். 10 வயதிற்கு குறைந்த சிறார்களை வேலையில் ஏற்க மறுத்தார். ஏனைய தொழிலதிபர்கள் ராபர்ட் ஓவன் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்தபோதிலும் தன் முயற்சியை தொடர்ந்தார்.

தொழிலாளருக்காக கூட்டுறவு குடியிருப்புகளும், குழுமங்களையும், இராபர்ட் ஓவன் தொடங்கினார். நியூலானாக் என்ற சிறிய கிராமத்தில் ஆலைகளை முன் மாதிரியாக அமைத்து அவைகளை சுய தேவைகளை பூர்த்தி செய்யும் சமுதாய அமைப்பாக உருவாக்கினார். கூட்டுறவு குடியிருப்புகளில் அவர்களுக்கு தேவையான பொருள்களை உற்பத்தி செய்யும் அமைப்பாகவும் தேவைப்படும் ஏனையவர்களுக்கு அதனை அளித்து மற்றைய பொருள்களை பெறுவதற்காகவும் ஒரு அமைப்பாக அமைந்தது. இதுபோன்ற குடியிருப்புகள் இங்கிலாந்து, அயர்லாந்து, வடஅமெரிக்கா மற்றும் மெக்சிகோவிலும் தொடங்கப்பட்டன. ஆனால் இக்குடியிருப்புக்களில் போதிய மூலதனத்தினை அங்கத்தினர்களிடமிருந்து பெற முடியவில்லை. அந்த அங்கத்தினர்களுக்கு தொழில் அல்லது வேளாண்மையில் அனுபவம் இல்லை. மேலும் உழைப்பு இல்லாதவர்களும் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு மேலாண்மைத் திறமையும், குறைவாக இருந்ததால், அவைகள் மூடப்பட்டன.

இராபர்ட் ஓவன் மனமுடைந்து போகவில்லை. 1832ஆம் ஆண்டு 'உழைப்பு மாற்றமைப்பு' என்ற அமைப்பின் மூலம் உழைப்பவர்களின் பொருளாதார நிலையை மாற்ற முயற்சி செய்தார். இந்த உழைப்பு மாற்றமைப்பு" தற்காலத்திலுள்ள 'வேலை வாய்ப்பு நிலையம்' என தவறாக எண்ணக்கூடாது. தொழிலாளர்கள் தாங்கள் செய்த உழைப்பிற்கு உழைப்பு மதிப்பீட்டுத்தாள்களை பெற்றனர். இதன்மூலம் தங்களுக்குத் தேவையான பொருட்களை அவர்கள் வாங்க முடிந்தது. மேலும், இத்தாள்களை மற்ற தொழில் மாற்றமைப்புக்களில் கொடுத்து தேவையான பொருள்களை வாங்க முடிந்தது. ஆனால், இந்த முயற்சியும் விற்க முடியாத பல பொருள் உற்பத்தியினால் தோல்வி அடைந்தது. இராபர்ட் ஓவன் இதனால் வருந்தினாரே தவிர தன் கோட்பாட்டின் தோல்வியாக எடுக்கவில்லை. தன்னுடைய எண்ணங்களை பத்திரிகைகளின் மூலம் போட்டியினை கூட்டுறவின் மூலம் சமாளிக்கலாம் எனக் கருத்து தெரிவித்தார்.

இக்கால கட்டத்தில் டாக்டர் வில்லியம் கிங் என்ற இலண்டன் மருத்துவர் 'வாணிப அமைப்புகள்' என்று ஒரு அமைப்பினை தோற்றுவித்தார். இவ்வாணிப அமைப்புகள் அங்கத்தினர்களின் அன்றாட தேவைக்கான பொருள்களை குறைந்த விலையில் முடிந்த வரையில் அடக்க விலையில் விற்று வந்தனர். இந்த அமைப்பு பல இடங்களிலும் தொடங்கப்பட்டது. குறைந்த விலையில் விற்பதற்காக பொருள்கள் உற்பத்தி மேற்கொண்டது. இதனால் பலருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் அதிக உற்பத்தியின் காரணமாக சந்தையிடுகை செய்ய முடியாமல் அவைகள் மூடப்பட்டன. டாக்டர் வில்லியம் கிங் 'கூட்டுறவு என்ற மாத இதழினையும் வெளியிட்டார். அவருடைய வாணிப அமைப்புகள் தற்கால கூட்டுறவு சங்கங்களைப் போல அமைந்தன கூட்டுறவு எண்ணத்தினை இக்கால கட்டத்தில் பிரெஞ்சு நாட்டு சார்லஸ் பூரியர் மற்றும் பிலிப்பூச் என்பவர்களும் கூட்டுறவு எண்ணத்திற்கு வலுவான ஆதரவு அளித்தனர்.

# கூட்டுறவின் கோட்பாடுகள் மற்றும் பன்னாட்டு கூட்டுறவு அமைப்பு (ICA)

**கூட்டுறவின் கோட்பாடுகள் (Prinicples of Co-operation)**

நியாய அடிப்படை மற்றும் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டின் தத்துவத்தில் தனித்தன்மையான வாணிப முறையே கூட்டுறவாகும். ஒவ்வொருவரும் அனைவருக்காகவும், அனைவரும் ஒவ்வொருக்காகவும்'என்ற தத்துவத்தின் பிரதிபலிப்பே கூட்டுறவாகும். நியாயப் பங்கீடு என்பது கூட்டுறவின் குறிக்கோள் உற்பத்தி, வழங்கல், வங்கியியல், சந்தையிடுகை, பால் வினியோகம் மற்றும் பல்வேறு பொருளாதார பிரச்சனைகளை கூட்டுறவு மூலம் சிறப்பாகத் தீர்வு காணலாம். கூட்டுறவுச் சங்கத்தின் தோற்றுவிப்பாளர்களின் பொதுவான பொருளாதாரப் பிரச்சனையே அச்சங்கத்தினை உருவாக்குகின்றது. கூட்டுறவுச் சங்கங்கள், தர்ம அமைப்புகள் அல்ல. கூட்டுறவு என்பது சுய உதவி மற்றும் மாற்று அடிப்படையில் மற்றவர்களுக்கும் உதவி அளிப்பது என்ற மனோபாவம் உள்ளவர்களின் கூட்டு உறவேயாகும். ஒவ்வொரு உறுப்பினரும், அனைத்து உறுப்பினர்களின் நன்மையினைக் கருதும் எண்ணம் உடையவர்களாவர். அனைவரும் ஒன்று சேர்ந்து தங்கள் ஆற்றலை ஒன்று சேர்த்து அனைத்து உறுப்பினர்கள் நன்மையினை சுய நல நோக்கின்றி கூட்டு முயற்சி மற்றும் கூட்டு செயல்பாட்டின் மூலம் முன்னேறுவதே கூட்டுறவாகும்.

வலுவான மற்றும் செல்வமிக்கவர்கள் பெறுகின்ற பொருளாதார மேம்பாட்டினை, வலுகுறைந்த, ஆதிக்க சக்தியற்ற, ஏழ்மை நிலையிலுள்ளவர்களும் பெறும் நிலைக்கு உயர்த்தும் கூட்டு முயற்சியே கூட்டுறவாகும். ஒரு கூட்டுறவுச் சங்கம் தன்னிச்சையான அமைப்பு, அனைவரும் அதில் சேர்ந்து பயன்பெற வரவேற்கப்படுகின்றனர். கூட்டுறவில் ஒவ்வொரு உறுப்பினருக்கும், சம உரிமையும், சம பொறுப்புக்களும் உண்டு. இவ்வமைப்பு லாப நோக்கின்றி ஒவ்வொருவரும் மற்றவர் நன்மை, உதவி கருதி ஏற்படுத்தப்படும் அமைப்பாகும்.

அங்கத்தினர்களின் பொருளாதார மேம்பாட்டையே குறிக்கோளாகக் கொண்டு, அதற்காக ஏற்படுத்தப்படும் பொருளாதார அமைப்பு முறையே கூட்டுறவாகும். கூட்டுறவு அனைத்துப் பொருளாதார, அரசியல் அமைப்புக்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் உள்ளது. வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்லும் வளரும் நாடுகளுக்கு கூட்டுறவு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இந்நாடுகளில் அறியாமை, படிப்பறிவு இன்மை, சமுதாய வேறுபாடுகள், நோய், நலிவுற்ற பெண்கள், சிறார்கள் ஆகியவை பிரச்சனையாக அமைந்துள்ளன. இச்சங்கங்கள் அந்நாடுகளில் பொருளாதார சமுதாய மாற்றங்களை ஏற்படுத்த வல்ல முக்கிய வலுவான, பயனுள்ள கருவியாகக் கருதப்படுகின்றது. ஒரு கூட்டுறவு சங்கம் உறுப்பினர்களின் பொதுவான பொருளாதார, சமுதாய, கலாச்சாரப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண ஏற்படுத்தலாம்.

**பன்னாட்டு கூட்டுறவு அமைப்பு (ஐ.சி.ஏ) வரையரை**

முதன் முறையாக செப்டம்பர். 1995ம் ஆண்டு, மேன்சஸ்டரில் பன்னாட்டு கூட்டுறவு அமைப்பு, ஒரு வரையரையை அளித்துள்ளது.

நபர்கள், தன்னிச்சையாக தங்கள் பொதுவாக பொருளாதார சமூக, கலாச்சார தேவைகளை, ஜனநாயக கட்டுப்பாட்டு கூட்டமைப்பு மூலம் ஏற்படுத்தப்படும் தனித்தன்மை பெற்ற அமைப்பே கூட்டுறவாகும்.

மேலே கண்டுள்ள வரையரைப்படி

1. தனித்தன்மை அமைப்பு நபர்களின் தன்னிச்சை சேர்க்கை
2. பொதுவான பொருளாதார, சமூக, கலாச்சார தேவைகளை பூர்த்தி செய்தல்.
3. கூட்டமைப்பு
4. ஜனநாயகக் கட்டுப்பாடுகள்.

**ராக்டேல் தத்துவங்கள் (Rochdal Principles):**

1844 ஆம் ஆண்டே ராக்டேல் முன்னோடிகள் கூட்டுறவு கோட்பாடுகளை உருவாக்கியதற்கு அவர்கள் பாராட்டப்படவேண்டும். அக்கோட்பாடுகள் இன்றும் முழுவதும் ஏற்புடையது.

1. பொருட்களை நிலவும் சந்தை விலையில் விற்பது.
2. மூலதனத்திற்கு குறிப்பிட்ட வரையரைக்குட்பட்ட வட்டி அளித்தல்.
3. இலாப ஈவு அங்கத்தினர் சங்கத்தில் வாங்கிய அளவு பொருட்கள் அடிப்படையில் அளித்தல்.
4. ரொக்க அடிப்படையிலேயே கொள்முதல் மற்றும் விற்றுமுதல் செய்தல்.
5. இரு பாலருக்கும் சம உரிமைகள்.
6. ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒரே வாக்கு.
7. சங்க அலுவல் பற்றி விவாதிக்க அடிக்கடி அங்கத்தினர்கள் கூட்டம் நடத்துவது.
8. கணக்குகளை சரியாக வைப்பதோடு, தணிக்கை செய்து இலாப நட்டக் கணக்கு,இருப்பு நிலைக் குறிப்பு அங்கத்தினருக்கு அளித்தல்.

**ராக்டேல் கோட்பாடுகளை சுருக்கமாகக் கூறு வேண்டுமானால்**

1. ஜனநாயகக் கட்டுப்பாடு.
2. தடையற்ற திறந்த அங்கத்தினர் சேர்ப்பு.
3. மூலதனத்தின் மீது வரையறுக்கப்பட்ட வட்டி.
4. விசுவாச லாப ஈவு.
5. ரொக்க விற்பனை.
6. அரசியல் மற்றும் மத நடுநிலைமை.
7. கல்வி மேம்பாடு.

## கோட்பாடுகளின் விரிவாக்கம்

**1. ஜனநாயகக் கட்டுப்பாடு**

கூட்டுறவின் அடிப்படைத் தத்துவங்களில் ஒன்று ஜனநாயகக் கட்டுப்பாடு, ஜனநாயகம் கூட்டுறவின் அடித்தளம். கூட்டுறவு சங்கத்தின் பொதுக் குழுவின் முடிவே அனைத்து விவகாரங்களிலும் இறுதியானது. அன்றாட நிர்வாகம் பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இயக்குநர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும், ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒரு வாக்குதான் உண்டு.

**2. திறந்த அனுமதி**

தகுதியுள்ள எவரும் கூட்டுறவு சங்கத்தில் அனுமதிக்கப்படுவர். மதம், சாதி, அரசியல் கட்சி என்ற அடிப்படையில் யாரும் அனுமதி மறுக்கப்படமாட்டார். ஆனால், அனுமதிக்கு தகுதியுள்ளவர்தான் சேர்க்கப்படுவர். சங்கத்தின் செயல்பரப்பு எல்லைக்குள் வசிக்காத நபர் சங்கத்தின் அங்கத்தினர் ஆக முடியாது.

ஒரு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் மீன் பிடிப்பதைத் தொழிலாகக் கொள்ளாத ஒருவர் அங்கத்தினராக முடியாது.

**3. மூலதனத்தின் மீது வரையறுக்கப்பட்ட வட்டி**

ஒரு கூட்டுறவு சங்கத்தில், அங்கத்தினர் தான் கொண்டுவந்துள்ள மூலதனத்தின் மீதான வட்டி வரையறுக்கப்பட்டது. ஓரளவு வட்டியே பெறலாம். ஒவ்வொரு மாநிலத்திலும் அமலில் இருக்கும் கூட்டுறவு சங்கங்கள் சட்டப்படி, வட்டி 13 அல்லது 14 விழுக்காடு என சங்க அங்கத்தினருக்கு அளிக்கவல்ல உச்ச வட்டி வீதத்தினை குறிப்பிட்டுள்ளது. கூட்டுறவு இயக்கம் முதலீடு செய்வதற்கான அமைப்பு அல்ல. அங்கத்தினர்களின் பொருளாதார பிரச்சனையை தீர்ப்பதே கூட்டுறவின் தலையான நோக்கமாகும்.

**4. ஆதரவுக்கான விசுவாச லாப ஈவு**

ஒரு கூட்டுறவு சங்கத்தில், காப்பு நிதி, ஏனைய சட்ட பூர்வமான நிதிகளுக்கு ஒதுக்கீடு செய்த பின் எஞ்சிய லாபத்தை அங்கத்தினர்களுக்கு விசுவாச லாபமாக பகிர்ந்து கொடுக்கலாம். இப்பங்கீடு அவர்கள் எடுத்துக் கொண்டுள்ள பங்குகள் அடிப்படையில் அல்ல. அங்கத்தினர்கள் சங்கத்திற்கு விசுவாசமாக இருந்து எத்துணை அளவு சங்க வாணிபத்தைப் பயன்படுத்தி இருக்கிறார்களோ அந்த அடிப்படையிலேயே அமையும். உதாரணமாக, ஒரு நுகர்வோர் சங்கத்தில் அங்கத்தினர் அவ்வாண்டில்

SURA'S

சங்கத்திலிருந்து கொள்முதல் செய்த அளவிலும், ஒரு பால் அளிப்பு சங்கத்தில், அங்கத்தினர்கள் எவ்வளவு அளவு பால் சங்கத்திற்கு அளித்துள்ளார் என்ற அடிப்படையிலும், கைத்தறி நெசவாளர் சங்கங்களில், அங்கத்தினர் எவ்வளவு துணி சங்கத்திற்கு நெசவு செய்துள்ளார் என்ற அடிப்படையிலும் அமையும்.

**5. ரொக்க விற்பனை**

கூட்டுறவு பண்டக சாலைகள் ரொக்க விற்பனை தான் செய்யும். கடன் விற்பனை கிடையாது. ஏனெனில் கடன் விற்பனை அங்கத்தினரை தேவைக்கு அதிகமாக வாங்க ஊக்குவித்து, திருப்பித்தர இயலாமல் அவருக்கு பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தும். மேலும் கூட்டுறவின் அடிப்படை சேமிப்பு, சிக்கனம், செலவினை கட்டுப்படுத்துதல் ஆகியன ஆகும். எனினும் கூட்டுறவு பண்டக சாலை, மாணவர் உணவு விடுதி, மருத்துவமனை, சிறைச்சாலை ஆகிய அமைப்புகளுக்கு, குறுகிய காலத்திற்கு கடனளிக்கலாம்.

**6. அரசியல் மற்றும் மத நடுநிலைமை**

அங்கத்தினர்கள் எந்த அரசியல் கட்சியையோ மதத்தையோ சார்ந்தவராக இருக்கலாம். அதனை மனதில் கொண்டு, பாகுபாடு காட்டி, அனுமதியினை மறுக்க முடியாது.

**7. கல்வி மேம்பாடு**

ஒவ்வொரு கூட்டுறவு சங்கமும், அங்கத்தினர்கள், இயக்குனர் குழு மற்றும் பணியாளர்களுக்கு கூட்டுறவு பற்றியும் ஏனைய தகவல்கள் பற்றிய கல்வி அளித்தல் ஒரு தலையாய பணி ஆகும்.

## சீரமைக்கப்பட்ட கோட்பாடுகள்

பன்னாட்டு கூட்டுறவு அமைப்பு (ஐ.சி.ஏ) அவ்வப்போது கூட்டுறவு கோட்பாடுகளை விவாதித்து மறுஆய்வு செய்து வந்துள்ளது. கூட்டுறவில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் மற்றும் வளர்ச்சி அடிப்படையில் சில மாற்றங்கள் தேவைப்படும். இதனால் ராக்டேல் கோட்பாடுகள் அனைத்தும் மாற்றப்பட்டுள்ளன என எண்ணக் கூடாது. சிறு மாற்றங்களும், புதிய கோட்பாடுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

**முதல் சீரமைப்பு**

1934ம் ஆண்டு ஐ.சி.ஏ. ஒரு துணைக் குழுவை அமைத்து கூட்டுறவுக் கோட்பாடுகளை மறு ஆய்வு செய்யக் கேட்டுக் கொண்டது. இக்குழு தன் அறிக்கையை 1937ம் ஆண்டு கொடுத்தது. இக்குழு கோட்பாடுகளை இரு கூறுகளாக 1) மிக அவசியக் கோட்பாடுகள் என்றும், 2) முக்கியத்துவம் குறைந்த கோட்பாடுகள் என்றும் குறிப்பிட்டது.

**மிக அவசியக் கோட்பாடுகள்**

1. திறந்த அங்கத்தினர் சேர்ப்பு
2. ஜனநாயகக் கோட்பாடு
3. மூலதனத்தின் மீது வரையறுக்கப்பட்ட வட்டி வீதம்.
4. இலாப ஈவு அங்கத்தினர்கள் சங்கத்திற்கு வாணிப அடிப்டையில் அளித்தல்.

**முக்கியத்துவம் குறைந்த கோட்பாடுகள்**

1. மத மற்றும் அரசியல் நடுநிலைமை.
2. ரொக்க விற்பனை.
3. அங்கத்தினர்களுக்கு கல்வி

**இரண்டாவது சீரமைப்பு**

டி.ஜி. கார்வே, என்ற இந்திய கூட்டுறவு வல்லுனரின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, இக்குழு 1966ம் ஆண்டு தன் அறிக்கையை அளித்தது.

**இக்குழுவின்படி, சீரமைக்கப்பட்ட கோட்பாடுகள்.**

1. தன்னிச்சை அமைப்பு மற்றும் திறந்த அங்கத்தினர் சேர்ப்பு.
2. ஜனநாயகக் கட்டுப்பாடு.
3. மூலதனத்தின் மீது வரையறுக்கப்பட்ட வட்டி வீதம்.
4. அங்கத்தினர்கள் அளித்த பணி அடிப்படையில் இலாபப் பிரிவு,
5. கூட்டுறவுக் கல்வி.
6. கூட்டுறவுகளுக்கு இடையே கூட்டுறவு.

இக்கோட்பாடுகளில் கடைசி கோட்பாடாகிய 'கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு' என்பது முக்கியமான சேர்க்கையாகும். அக்கோட்பாட்டின் பரிமாணம் பல நோக்கமாக உள்ளது.

தொடக்க கூட்டுறவுக்கும், மாவட்ட கூட்டுறவு சங்கத்திற்கும், மாவட்ட கூட்டுறவு சங்கத்திற்கும், மாநில இணையகத்திற்கும், தேசிய இணையகத்திற்கும், ஒரு மாநில கூட்டுறவிற்கும் ஏனைய மாநில கூட்டுறவிற்கும் ஒரு நாட்டுக் கூட்டுறவிற்கும் மற்றைய நாட்டு கூட்டுறவிற்கும், கூட்டுறவு ஏற்படுத்தல் வேண்டும்.

**ஐ.சி.ஏ. நூற்றாண்டு விழா**

ஐ.சி.ஏ.வின் 100 வது நிறைவு விழாவை ஒட்டி இங்கிலாந்து நாட்டில் மேன்சஸ்டர் என்ற இடத்தில் 1995ஆம் ஆண்டு நடந்த கூட்டுறவு தத்துவங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன.

1. தன்னிச்சை மற்றும் திறந்த அங்கத்தினர் சேர்ப்பு.
2. ஜனநாயக அங்கத்தினர் கட்டுப்பாடு.
3. அங்கத்தினர் பொருளாதார பங்கேற்பு.
4. சுதந்திரம், தனித்தன்மை.
5. கல்வி, பயிற்சி மற்றும் தகவல் தொடர்பு.
6. கூட்டுறவுகளிடையே கூட்டுறவு.
7. சமுதாயத்தின் மீது அக்கறை.

சமுதாயத்தின் மீது அக்கறை என்பது முக்கிய கோட்பாடாக சேர்க்கப்பட்டுள்ளது. பொதுவாக கூட்டுறவுக்கு சமுதாய அக்கரை இருந்தாலும் இக்கோட்பாட்டின்படி சமுதாய அக்கரை காட்டி புதிய கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றப்படல் வேண்டும்.

கூட்டுறவின் சிறப்பினை, "மேன்சஸ்டர் மாநாடு" கூட்டுறவு சுய முயற்சி சுய பொறுப்பு, ஜனநாயகம், சமநோக்கு, ஒற்றுமை என்ற அடிப்படைத் தத்துவங்களும், சேவை எண்ணம், நேர்மை, திறந்த பார்வை, சமுதாய பொறுப்பு ஆகியவைகளை உடையது' என கூட்டுறவின் அடிப்படைகளைக் கூறியுள்ளது.

**பன்னாட்டு கூட்டுறவு அமைப்பு (ஐ.சி.ஏ / ICA)**

1895 ஆம் ஆண்டு கூட்டப்பட்ட பன்னாட்டு கூட்டுறவு காங்கிரஸ் மூலம் பன்னாட்டு கூட்டுறவு அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. உலகம் முழுவதும் உள்ள நாடுகளிலிருந்து 163 அமைப்புகள் பன்னாட்டு கூட்டுறவு அமைப்போடு இணைக்கப்பட்டுள்ளன. அகில உலக அமைப்புகளில் பழமையானது பன்னாட்டு கூட்டுறவு அமைப்பாகும். இது முழுமையாக கூட்டுறவு பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பாடுபட்டது. உலக அளவில் உள்ள கூட்டுறவாளர்களை ஒன்றிணைப்பது சிறந்த பணியாக செய்யப்படுகிறது. வணிகம், வங்கிகள், காப்பீடு போன்ற துறைகளில் தொடர்பை ஏற்படுத்தி பல்வேறு நாடுகளின் கூட்டுறவு அமைப்பை திறம்பட நடத்த வழி செய்கின்றது. உலக சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்தி நுகர்வோர்களையும், உற்பத்தியாளர்களையும் பெருமளவில் பயன்பெறச் செய்கின்றது.

**நோக்கங்கள்**

பன்னாட்டு கூட்டுறவு அமைப்பின் குறிக்கோள்கள் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பன்னாட்டு கூட்டுறவு அமைப்பு ராக்டேல் முன்னோடிகள் விட்டுச்சென்ற பணியை தொடர்ந்து செய்து வருகிறது. பன்னாட்டு கூட்டுறவு அமைப்பு சொந்தமான வழிமுறைகளை உருவாக்கி சுதந்திரமாக இயங்குகின்றது. கூட்டுறவு முறைகளில் இலாப நோக்குடைய சிந்தனைக்கு பதிலாக சமூகத்தில் பயன்பெறக் கூடிய வகையில் பரஸ்பர உதவி திட்டம் பின்பற்றப்படுகிறது.

அ. கூட்டுறவு அமைப்புகளில் ஒரே மாதிரியான பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதற்காக எல்லாவகையான செயல்பாடுகளையும் கூட்டுறவு கோட்பாடுகளின்படி செய்தல் வேண்டும்.

ஆ. உலகம் முழுவதும் கூட்டுறவு கோட்பாடுகளை பிரச்சாரம் செய்யவேண்டும்.

இ. கூட்டுறவு அமைப்பை எல்லா நாடுகளிலும் ஏற்படுத்த வேண்டும்.

ஈ. எல்லாவகையான கூட்டுறவுகளை கண்காணிக்க வேண்டும்.

உ. பன்னாட்டு கூட்டுறவு அமைப்புகளை சார்ந்த நிறுவனங்களோடு நல்லுறவை ஏற்படுத்துதல் வேண்டும்.

ஊ. தேசிய அளவிலும், உலக அளவிலும் உள்ள கூட்டுறவு நிறுவனங்களோடு பொருளாதார உறவை சீரமைக்க வேண்டும்.

எ. கூட்டுறவு முயற்சிகள் மூலம் மக்களுக்கு அமைதியும் பாதுகாப்பும் ஏற்படுத்துதல் வேண்டும்.

**உறுப்பினர் சேர்க்கை**

பன்னாட்டு கூட்டுறவு அமைப்பு உள்ளபடி உறுப்பினருக்கான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு கூட்டுறவு அமைப்பில் உறுப்பினராவதற்கு மனிதர்களின் கூட்டமைப்போ, கூட்டுறவு அமைப்போ தகுதிபெறுகின்றது. குறிக்கோள்களை நிர்ணயிக்கும் காங்கிரஸில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. சட்டப்படி உருவான சங்கங்கள், கூட்டுமைப்பு போன்றவைகள் சமுதாய பொருளாதார மேம்பாடு அடைய பரஸ்பர உதவி மூலம் செயல்படுகின்றது. பன்னாட்டு கூட்டுறவு அமைப்பின் 23 வது காங்கிரஸ் மாநாட்டில் ராக்டேல் முன்னோடிகளின் கூட்டுறவு கோட்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டன. விதிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி சில அமைப்புகள் உறுப்பினர்களாக சேரத் தகுதி பெறுகின்றன.

1. தேசிய கூட்டுறவு ஒன்றியம்.
2. தேசிய கூட்டுறவு இணைய அமைப்பு.
3. கூட்டுறவு சங்கங்களின் மண்டல ஒன்றியம்.
4. நுகர்வோர் கூட்டுறவு மொத்தவிற்பனை பண்டகசாலை.
5. கூட்டுறவு வங்கிகள் மற்றும் காப்பீட்டு சங்கங்கள்.
6. நுகர்வோர் கூட்டுறவு சங்கம்.
7. தொழில் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள்.
8. மீனவ கூட்டுறவு சங்கங்கள்.
9. கூட்டுறவு கடன் சங்கங்கள்.
10. வீட்டு வசதி கடன் சங்கங்கள்.

உலக அளவில் உள்ள அனைத்து தேசிய கூட்டுறவு அமைப்புகளும் பன்னாட்டு கூட்டுறவு அமைப்பில் உறுப்பினராக உள்ளன. பெரும்பான்மையான தேசிய கூட்டுறவு இயக்கங்கள் பன்னாட்டு கூட்டுறவு அமைப்போடு தொடர்புடையவையாகும். அரசு மேற்பார்வையும், கட்டுப்பாடும் உள்ள கூட்டுறவு அமைப்புகள் பெயரளவு உறுப்பினர்களாக மட்டுமே சேரத் தகுதி அடைகின்றன.

**பன்னாட்டு கூட்டுறவு சார்பு அமைப்பின் செயல்பாடுகள்**

1. பன்னாட்டு கூட்டுறவு அமைப்பின் குறிக்கோள்களையும் கொள்கைகளையும் பின்பற்றுதல்.

2. ஒவ்வொரு நிதியாண்டிலும் சந்தா செலுத்த வேண்டும்.

3. ஐ.சி.ஏ.வின் ஆண்டு அறிக்கை வழங்குதல் வேண்டும்.

4. புத்தகங்கள் வெளியீடு தொடர்பாக அந்தந்த நாடுகளுக்கு ஐ.சி.ஏ. மூலம் தெரிந்து கொள்ளுதல்.

5. ஐ.சி.ஏ வேண்டுகின்ற போதெல்லாம் எல்லாவிதமான தகவல்களையும் அளித்தல்.

6. ஐ.சி.ஏ. பரிந்துரைக்கும் ஆலோசனையின்படி எல்லா செயல்களையும் மேற்கொள்ளதல்.

7. ஐ.சி.ஏ.–யின் வெளியீடு மற்றும் புத்தக விற்பனைக்கு உதவுதல் அவசியமாகும்.

**ஐ.சி.ஏயின் மேலாண்மை**

ஐ.சி.ஏ. பொதுவாக கீழ்க்கண்டமுறையில் நிர்வகிக்கப்படுகிறது. 1. காங்கிரஸ், 2. மத்தியக்குழு, 3. செயற்குழு, 4. இயக்குநர்கள், 5. பொதுச் செயலாளர். காங்கிரஸ் என்பது கூட்டுறவு பன்னாட்டு அதிகார அமைப்பாகும். சார்பு அமைப்புகளின் பேரவையாகும். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பல்வேறு நாடுகளில் கூடுகிறது. கூட்டுறவு காங்கிரஸில் ஐ.சி.ஏ. பற்றி ஆய்வு செய்து மத்தியக்குழு மூலம் செயல்படுத்தப்படுகிறது. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கருத்துக்கள் இயக்குநர்கள் மூலம் நிர்வாகிகளுக்கு தெரியப்படுத்தப்படுகின்றன. செயல்படுத்தும் அமைப்பாக மத்தியக்குழு, செயற்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் செயலகம் போன்றவை திகழ்கின்றன. மத்தியக்குழு தேசிய அளவில் உள்ள அமைப்புகளை கொண்டு பங்குகள் வசூல் செய்ய முயல்கின்றது. கூட்டுறவு காங்கிரஸில் விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்ட கருத்துக்களுக்கு செயல்வடிவம் கொடுக்க மத்தியக்குழு செயல்படுகிறது. மத்தியக்குழுவுக்கு உறுப்பினர்களை விலக்குவதற்காக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக இணையத்தின் விதிகள், குறிக்கோள்கள், செயல்பாடுகள் ஆகியவற்றிற்கு எதிராக செயல்படக்கூடியவர்கள் ஐ.சி. ஏவிலிருந்து நீக்கப்படுவார்கள். கூட்டுறவு காங்கிரஸ் தலைவர், துணைத்தலைவர், செயற்குழு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு அடுத்த காங்கிரஸ் கூடும் வரை பதவியில் நீடிப்பது வழக்கமாகும். ஐ.சி.ஏயின் அன்றாட செயல்பாடுகள் செயலகத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**நிதி**

67 நாடுகளிலிருந்து 163 அமைப்புகள் ஐ.சி.ஏயில் அங்கத்தினர்களாக உள்ளன. அதிகபட்ச உறுப்பினர்கள் நுகர்வோர் சங்கங்கள் 37.88% கடன் மற்றும் சிக்கனச் சங்கங்கள் 33.92% விவசாய சங்கங்கள் 18.78%, வீட்டு வசதி, தொழில் கூட்டுறவு 9.42% உள்ளனர். ஐ.சி.ஏ. அமைப்பின் எண்ணிக்கை நிதி ஆதாரங்களை வழங்குவதோடு மேலும் மனிதவள மேம்பாட்டிற்கு திறமையானவர்கள், நிபுணர்கள் போன்றோரை வழங்கி வளர்ந்து வரும் நாடுகளின் கூட்டுறவு அமைப்புகளை மேம்படையச் செய்கிறது. ஐ.சி.ஏயின் பிரதான வருவாயே உறுப்பினர் அமைப்புகளின் சந்தாவாகும். சில சிறப்புத் திட்டங்களுக்கு நிதி உதவி தேசிய தொழில் நுட்ப அமைப்புகளிடமிருந்தோ அல்லது உறுப்பினர் அமைப்புகளிடமிருந்தோ பெறப்படுகிறது. வளர்ந்து வருகின்ற பொருளாதார சிந்தனைகளின்படி பலநாடுகளின் கூட்டுறவு அமைப்புகளிடையே சுமுகமான உறவை ஏற்படுத்த வேண்டும். பொருளாதார தட்டுப்பாடும், தடைகளும் நீக்கப்பட்டு பரஸ்பர உதவி மூலம் உலக நாடுகளில் நிரந்தரமாக அமைதியை ஏற்படுத்த நிதி பெறப்படுகிறது. ஐ.சி.ஏ அமைப்பானது அரசியலுக்கும் மற்றும் உள்ள அமைப்புகளுக்கும் நடுநிலையாக விளங்கி வருகிறது.

**பன்னாட்டு ஆலோசனை அமைப்பு**

ஐ.சி.ஏ. உயர்ந்த பட்ச ஆலோசனை பெறவும் வழங்கவும் சில பன்னாட்டு முகமைகளோடும், அமைப்புகளோடும் சுமுகமான உறவை வைத்துள்ளது. யுனெஸ்கோ, ஐ.எஸ்.ஓ., எஃப்.ஏ.ஓ., யுனிசெஃப், பன்னாட்டு அணுசக்தி முகமை போன்ற அமைப்புகள் மிகவும் முக்கியமானதாகும். ஐ.சி.ஏ–யின் பிரதான நோக்கமே அணுகுமுறையிலும் பங்கேற்பிலும் அறிவு, அனுபவம், திறமை ஆகியவற்றை வளர்ந்த நாடுகள் வளருகின்ற நாடுகளுக்கு வழங்கச் செய்ய வேண்டும். ஐ.சி.ஏ. தோன்றிய காலம் முதல் உலக நாடுகளின் அமைதிகாக்கும் பங்கை சிறந்த முறையில் கடைபிடித்துள்ளது. உலக அளவில் எல்லா நாடுகளும் வளம் பெறவும், வளர்ச்சி பெறவும் ஐ.சி.ஏ உதவியுள்ளது. ஐக்கியநாடுகளின் சபை திறமையான வழியில் செயல்களிலும் ஈடுபாட்டுடன் ஐ.சி.ஏ ஆலோசனை அமைப்பு செயல்பட்டுள்ளது. பன்னாட்டு கூட்டுறவு அமைப்புக்கும், ஐக்கியநாடுகள் சபைக்கும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி எல்லா வகைகளிலும் பன்னாட்டு ஆலோசனை அமைப்பு உதவியுள்ளது. பன்னாட்டு கூட்டுறவு அமைப்பின் அதிகாரிகள் மாநாடு, கருத்தரங்கம் போன்றவைகளை ஐ.நா. சபை நடத்தும்போது சிறந்த நிபுணர்களாகவும், கருத்தாளர்களாகவும் கலந்துகொள்கின்றனர்.

**தொழில் நுட்ப உதவி**

ஐ.சி.ஏ. மற்றும் பல அமைப்புகள் நிதி உதவி பெறவேண்டும், தொழில் நுட்ப உதவி பெறவேண்டும் என்பதற்காக பல பொருளாதார திட்டங்களை தயாரிக்கின்றன. அகில உலக அளவில் வாணிப கூட்டுறவு அமைப்புகிடையே சுமுகமான உறவையும் தொடர்பையும் ஏற்படுத்துகிறது. 1960–ஆம் ஆண்டு நடைபெற்ற 21வது கூட்டுறவு காங்கிரஸில்

நீண்டகாலத் திட்டம் தீட்டி தொழில் நுட்ப உதவி வழங்க கூட்டுறவு இயக்கங்கள் முன்வர வேண்டும்.

**திட்டங்களின் பிரதான சிறப்பம்சங்கள்**

1. வளருகின்ற மண்டலங்களை பார்வையிட்டு திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று முழுமையடைய வேண்டும்.
2. பல வகையான கூட்டுறவுகளின் பிரச்சினைகளை தீவிர ஆய்வு செய்து பரிந்துரைகள் வழங்கப்பட வேண்டும்.
3. நிரந்தரமான கல்வி நிறுவனங்களுக்கு கல்வி வசதி ஏற்படுத்தி எல்லா நிலைகளிலும் பயன்பெறும் வகையில் மண்டல கருத்தரங்குகள் புத்தகங்கள் கொள்முதல், கற்பிக்கும் உபகரணங்கள் ஆகியவை வழங்கப்படுகின்றன.
4. தேசிய அளவில் உள்ள கூட்டுறவு ஒன்றியங்களும் மற்ற முகமைகளும் ஒன்றாக சேர்ந்து ஆராய்ச்சி செய்து கூட்டுறவு கல்வி மற்றும் பயிற்சியை மேம்படுத்த வேண்டும்.
5. வணிக அபிவிருத்தியும், முன்னேற்றமும், வளர்ந்து வருகின்ற நாடுகளின் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் மற்றும் திறமையாக செயல்படுகின்ற கூட்டுறவு இயக்கங்களுக்கும் தொடர்பை ஏற்படுத்தத் தர வேண்டும்.

கூட்டுறவு காங்கிரஸ் மாநாட்டில் ஒரே மாதிரியான வளர்ச்சி கூட்டுறவுகளில் ஏற்படவேண்டும் என்பதற்காக தொழில்நுட்பம் செயல்வடிவ அறிவியல் போன்றவற்றை பின்பற்ற வேண்டும். கூட்டுறவு இயக்கத்தின் குறிக்கோள் இருக்கின்ற வளங்களை மிகவும் திறமையான வழிகளில் பயன்படுத்த வேண்டும். அடுத்து நடந்த கூட்டுறவு காங்கிரஸில் கூட்டுறவு செயல்பாடுகள் பற்றி பரிசீலனை செய்யப்பட்டு தொழில் நட்ப ரீதியாக வணிக முறை நடத்தப்பட்டது. பன்னாட்டு கூட்டுறவு அமைப்பைச் சார்ந்த நிறுவனங்கள் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்த தொழில்நுட்ப உதவியை வேண்டியது. கூட்டுறவு காங்கிரஸ் ஒரு வேண்டுகோள் விடுத்தது. அதாவது முன்னேறிய கூட்டுறவு நிறுவனங்கள் வளருகின்ற நாடுகளின் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு, தொழில் நுட்பங்களில் உதவவேண்டும். அப்பொழுதுதான் வளருகின்ற நாடுகளில், நுகர்வோர் தொழில் போன்றவற்றை தோற்றுவிக்க முடியும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. பன்னாட்டு கூட்டுறவு அமைப்பு பெருந்தன்மையாக வளர்ச்சி நிதியை உறுப்பினர்களிடமிருந்து வசூலித்து தொழில்நுட்ப ரீதியாக உதவி, வளருகின்ற கூட்டுறவு இயக்க நாடுகளை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

**ஐ.ஏ.சி. யின் பங்கு**

உலக அளவில் பன்னாட்டு கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இதனுடைய முக்கிய நோக்கமே உள்வாணிபத்தை பெருக்குவதற்கு மொத்தவிற்பனை சங்கங்களை உருவாக்கி மொத்த விற்பனையாளர் என்ற முறையில் எந்தவித இடர்பாடும் இல்லாமல் அவைகளே உற்பத்தி செய்து அகில உலக அளவில் வாணிபத்தை நடைபெறச் செய்கிறது. ஆய்வு அறிக்கையின்படி பலவிதமான பரிந்துரைகள் செய்யப்பட்டு வியாபாரம் செய்கின்ற கூட்டுறவு அமைப்புகளை நேரடியாக கண்காணித்து உதவிசெய்து வருகிறது. நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் ஏற்படுத்தி வணிகத்தில் மூலப்பொருள்களை பெற வழிவகை செய்யப்பட்டது. குறிப்பாக உணவுப்பொருள், பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றில் சாத்தியக்கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

பன்னாட்டு கூட்டுறவு அமைப்பு அதனுடைய மண்டல அலுவலகங்கள் மூலம் வணிக கூட்டுறவுகள் பயன்பெறக்கூடிய வகையில் வணிக செய்திகளை வெளியிட்டு வருகின்றன. கூட்டுறவு வணிகத் தொகுப்பு என்ற பத்திரிக்கை வழியாக வெளியிடப்படுகிறது. இப்பத்திரிகையில் வணிக ஒப்பந்தங்கள் சம்பந்தமாக விரிவானதகவல்களும் பொருள்களின் பட்டியலும் பிரசுரிக்கப்படுகிறது. ஐ.சி.ஏயின் தென்கிழக்கு ஆசிய மண்டல அலுவலகம் சிறந்த பணியாற்றியுள்ளது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். ஐ.சி.ஏயின் மண்டல அலுவலகம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு கூட்டுறவுகள் பன்னாட்டு சந்தையில் தொடர்பு கொள்ள உதவுகின்றன.

1. வணிகம் நடைபெறவும், விரிவாக்கமடையவும் வளருகின்ற நாடுகளின் கூட்டுறவு அமைப்புக்கும் மற்றும் வளர்ந்த நாடுகளின் முன்னேற்றமடைந்த கூட்டுறவு அமைப்புக்கும் சுமூக உறவை ஏற்படுத்த உதவுகிறது.
2. கூட்டுறவு வணிக அமைப்புகள் வணிக சம்பந்தமாக செய்திகளை சேகரிக்கவும் பரப்பவும் ஐ.சி.ஏ உதவுகின்றது.
3. வணிகம் தொடர்பான ஆவணங்களை தயாரிக்கிறது.
4. பன்னாட்டு வாணிபத்தில் சிறந்து விளங்கக்கூடிய கூட்டுறவு அமைப்புகள் தொடர்பான தகவல்களையும் இலக்கியங்களையும் தயாரித்து வழங்குகிறது.
5. ஆலோசனை வழங்கவும், வாணிப ஒப்பந்தங்களை ஏற்படுத்தவும் உதவுகின்றது.
6. வணிக பரிமாற்றம் ஏற்படுத்தப்பட்டு ஒருங்கிணைக்க உதவுகின்றது.
7. கூட்டுறவு இயக்கம் தகுந்த வாணிபக் குழுக்களிலும், அமைப்பிலும் பிரதிநிதித்துவம் பெறக்கூடிய வாய்ப்புகளை ஆராய வேண்டும்.
8. அகில உலகில் ஆர்வமுள்ள பன்னாட்டு அமைப்புகளுடன் தொடர்பு ஏற்படுத்தி. பொருள் சந்தையிடல் கழகத்தோடு நிர்வாகம் செய்தல்
9. பன்னாட்டு வாணிப ஒப்பந்தம் நடைபெறுவதற்கு வழிவகை செய்தல்
10. வணிக சம்பந்தமாக அகில உலக அளவில் பயிற்சி திட்டங்களை உருவாக்கி, தகவல்களை சார்பு நிறுவனங்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

ஐ.சி.ஏ மற்றும் அதனுடைய சார்பு அமைப்புகள் பன்னாட்டு வாணிபத்தை அதிகரிப்பதற்கு கடந்த ஆண்டுகளில் ஆராய்ந்தது. வியாபாரத் தொகுப்பும், ஒப்பந்தமும் தாய்லாந்து விவசாயக் கூட்டுறவுக்கும், ஜப்பான் விவசாயக் கூட்டுறவுக்கும் ஏற்படுத்தி தானியத்தை உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுகிறது. ஒப்பந்தத்தின்படி விரிவாக்க பயிற்சி திட்ட வசதிகளை ஜப்பான் மற்றும் தாய்லாந்து கூட்டுறவாளர்கள் பயன்பெறச் செய்யப்பட்டது. நிபுணர்களின் சேவையும் தாய்லாந்து விவசாய கூட்டுறவில் தானிய உற்பத்திக்கு முக்கிய பங்காற்றியுள்ளது. உதாரணமாக சமீபத்தில் விவசாயம் தொடர்பான வேதிப்பொருட்களை உற்பத்தி செய்யும் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. ஐ.சி.ஏ மற்றும் விவசாய உற்பத்தியாளர்களின் பன்னாட்டு இணையம் இவற்றிற்கு தொடர்பை உருவாக்கி இரட்டைமுறை வாணிபம் தொடர்பான சாத்தியக் கூறுகள் கண்டறியப்பட்டன.

ஐ.சி.ஏயின் அரசியமைப்பின்படி விவசாயத் துணைக்குழு வாணிபத்தை தோற்றுவிக்க முதல் படியாக செயல்பட்டது. இந்த துணைக்குழு 1967–ஆம் ஆண்டு தென்கிழக்கு ஆசிய மண்டலத்தில் ஏற்படுத்தப்பட்டது. இதனுடைய குறிக்கோள்களாவன.

1. தகவல் மாற்றங்களை ஏற்படுத்தி தேசிய இயக்கங்களில் உள்ள விவசாய கூட்டுறவுகளை கண்டறிய வேண்டும்.

2. கூட்டுறவில் கூட்டுறவு என்ற கோட்பாட்டை விவசாய உற்பத்தியில் அதிகரிக்கச் செய்யும் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

3. மண்டலங்களில் விவசாயக் கூட்டுறவுத்துறைகளை தோற்றுவிக்க வேண்டும்.

பன்னாட்டு கூட்டுறவு வாணிபத்தில் துணைக் குழுக்கள் தகவல்களை பரிமாறிக் கொள்ளும் அமைப்பாக விளங்கி விவசாயக் கூட்டுறவுகளை கண்காணித்து வருகின்றன. இறக்குமதி, ஏற்றுமதி தொடர்பான வாணிபம் ஒவ்வொரு நாடுகளில் நடைபெறுகிறது. இவற்றில் கூட்டுறவு அமைப்புகள் அகில உலக அளவில் செயல்படும் சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டது. விவசாயக் கூட்டுறவுகள் தொடர்பான புள்ளி விவரங்களை சேகரித்து அந்தந்த மண்டல அலுவலகங்களுக்கு தெரிவிக்கப்படுகின்றன. விவசாயக் கூட்டுறவுகள் தொடர்பான பணிகளை மேம்பாடு அடையச் செய்து உரிய கவனம் செலுத்தி அதில் உள்ள பிரச்சனைகளை தீர்வு காண வேண்டும். விவசாயக் கூட்டுறவுகளை வளர்ச்சி பெறச் செய்வதற்கு சந்தையிடலில் கவனம் செலுத்தி தென்கிழக்கு ஆசிய துணைக்குழு உதவி வருகிறது. சில சமயங்களில் ஆய்வு செய்து திட்டங்கள் கூட தயாரித்து விவசாயக் கூட்டுறவுக்கு உதவுகின்றது. இவ்வகையான திட்டங்களுக்கு பன்னாட்டு

கூட்டுறவு அமைப்பும், ஜப்பான் விவசாயக் கூட்டுறவின் மத்திய அமைப்பும் 50:50 என்ற விகிதத்தில் நிதி உதவி அளித்து வருகின்றன.

**சமீப ஆண்டுகளில் ஐ.சி.ஏ வளர்ச்சி பணிகள்.**

1972 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டுறவு 25வது காங்கிரஸ் மாநாட்டில் சில செயல்பாட்டு திட்டங்கள் வகுக்கப்பட்டன. காங்கிரஸ் மாநாட்டில் முயற்சிகள் மேற்கொண்டு திறமையை வளர்க்கவும், அமைப்புகளை அபிவிருத்தியடையச் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. பன்னாட்டு கூட்டுறவு அமைப்பும் சில பணிகளுக்கு முன்னுரிமை வழங்கி அடுத்து வரும் நான்கு ஆண்டுகளில் (1977 – 1980) செயல்படுத்த வேண்டும். உலகம் முழுவதும் கூட்டுறவு இயக்கத்தின் தேவையை உணர்ந்து ஐ.சி.ஏ பணியாற்றி வருகிறது. பன்னாட்டு கூட்டுறவு அமைப்பு ஒரு கூட்டத்தை நடத்தியது. அதாவது இளைஞர்களுக்கு கூட்டுறவு கல்வியும், பயிற்சியும் என்ற தலைப்பில் விவாதங்கள் நடைபெற்றன. 1976 ஆம் ஆண்டு மாஸ்கோவில் நடைபெற்ற கூட்டத்தில் 62 பிரதிநிதிகள் 21 நாடுகளிலிருந்து பங்கேற்றனர். இந்தக் கூட்டத்தில் அகில உலக கூட்டுறவு இளைஞர்கள் மாநாடு தொடர்ந்து நடைபெறுவதற்கு வலியுறுத்தப்பட்டது. கூட்டுறவு இயக்கத்தின் மூலம் இளைஞர்களை ஒன்றுபடுத்தி சீரிய வழிகளில் பயிற்சி அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆசியா, ஆப்பிரிக்கா, மண்டல அலுவலகங்கல் மூலம் பல கூட்டங்கள் நடத்தி கூட்டுறவு இயக்கத்திற்கு புத்துணர்வு அளிக்கப்பட்டது. பன்னாட்டு கூட்டுறவு அமைப்பும் ஒரு பிரதிநிதியாக ஐக்கிய நாடுகள் அமைப்புகள் நடத்தும் கூட்டங்களில் கலந்து கொண்டுள்ளது.

1. நுகர்வோர் கூட்டுறவு பணிர்மான வாணிபத்தில் பன்னாட்டு அமைப்புகள் பங்கு கொள்கின்றன.

2. பன்னாட்டு கூட்டுறவு பெட்ரோலிய சங்கம், ஐ.சி.ஏ யின் உறுப்பினராக செயல்படுகிறது. முதன் முதலாக இங்கிலாந்து நாட்டில் வியாபாரத்தை தொடங்கியது.

3. 1972 ஆம் ஆண்டு ஏழு ஐரோப்பிய வங்கிகள் மற்றும் சில கூட்டுறவுகள் சேர்ந்து பன்னாட்டு கூட்டுறவு வங்கிக்குழுவை தோற்றுவித்தது.

4. பன்னாட்டு கூட்டுறவு காப்பீடு இணையம் ஏற்படுத்தப்பட்டது.

5. அகில உலக மறுகாப்பீடு அமைப்பு தோற்றுவிக்கப்பட்டு தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகின்றன.

6. 1963 ஆம் ஆண்டு பன்னாட்டு வளர்ச்சி அமைப்பு அமைக்கப்பட்டு, கூட்டுறவு காப்பீடு திட்டங்கள் தொடர்பான சாத்திக்கூறுகளுக்கான ஆய்வு செய்யப்பட்டது.

7. கூட்டுறவு தொழிலாளர் உற்பத்தி பன்னாட்டு குழு ஏற்படுத்தப்பட்டது.

8. விவசாயக் கூட்டுறவுகளின் அகில உலக குழு ஏற்படுத்தப்பட்டது.

9. அகில உலக கூட்டுறவு வீட்டுவசதிக்குழு தொடங்கப்பட்டு தேசிய அளவிலே வீடுகள் கட்டும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

10. நுகர்வோர் கொள்கைக்கான அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இவ்வகையான அமைப்பு சந்தையிடல், குழு, விளம்பரம், பகிர்மானம் ஆகியவற்றில் அகில உலக வாணிப அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

# வங்கிகளின் வகைகள்

**அறிமுகம்**

பல்வேறு வகையான வங்கிகள், பல்வேறு வகையான தொகுப்பு செயல்பாடுகளை வழங்கி வருகின்றன. அனைத்து வகையான வங்கிகளும் பணம் சம்பந்தப்பட்ட நடவடிக்கையில் ஈடுபட்டாலும் ஒவ்வொரு வகை வங்கிகளும் வெவ்வேறு துறைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. எனவே அனைத்து வகையான வங்கிகளைப் பற்றி அறிவது முக்கியத்துவம் பெறுகிறது.

**வங்கிகளின் வகைகள்**

வங்கிகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**i.** செயல்பாடுகளின் அடிப்படையில்

**ii.** இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட தகுதி அடிப்படையில்

**iii.** உரிமையாளர் முறை அடிப்படையில்

**செயல்பாடுகளின் அடிப்படையில் வங்கிகளை வகைப்படுத்துதல்**

**1. மைய வங்கி**

ஜனவரி 1, 1949 முதல் இந்திய ரிசர்வ் வங்கி அரசுக்குச் சொந்தமான மைய வங்கியாக செயல்பட்டு வருகிறது. அப்பொழுது இதில் மூன்று துறைகள் மட்டுமே இருந்தன. இந்திய ரிசர்வ் வங்கி 1947 வரை பர்மா நாட்டிற்கும் ஜூன் 1948 வரை பாகிஸ்தான் நாட்டிற்கும் மைய வங்கியாகச் செயல்பட்டது.

**2. வணிக வங்கிகள்**

இவ்வகை வங்கிகள் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, இலாபம் சம்பாதிப்பதற்காக வர்த்தகர்கள், தனிநபர்கள் ஆகியோருக்கும் விவசாயம், தொழிற்சாலைகள், போக்குவரத்து போன்ற துறைகளுக்கும் கடன்களை வழங்குகின்றன. பிற சில வங்கிகளை ஒப்பிடும் போது இவ்வகை வங்கிகள் சிறிய தொகையிலும், பெரும்பாலும் குறுகிய மற்றும் நடுத்தரக் கடன்களையும் வழங்குகின்றன. பணத்தை அனுப்புதல், விலை மதிப்புள்ள பொருட்களுக்குப் பெட்டக வசதி அளித்தல், காசோலைகளுக்குப் பணம் வழங்குதல், கடன் கடிதங்களை வெளியிடுதல் (Letter of Credit) போன்ற இதர சேவைகளையும் அவைகள் வழங்குகின்றன. ஒரு தலைமை அலுவலகத்தை மையமாகக் கொண்டு, நாடு முழுவதும் கிளை அலுவலகங்களை நிறுவிச் செயல்படுகின்றனர். மேலும் வணிகர்களுக்கு உத்தரவாதங்களை வழங்குகிறார்கள். ஒரு தொழிலதிபர் அல்லது தொழிற்சாலை நிறுவனர் ஒரு இயந்திரத்தைக் கடனுக்கு வாங்கும்போது அல்லது ஒரு பெரிய ஒப்பந்தத்திற்கு விண்ணப்பிக்கும் போது வங்கியானது வாடிக்கையாளர் பணம் செலுத்த இயலாத நிலைவந்தால் வங்கியானது அப்பணத்தைச் செலுத்திவிடுவதாக உத்தரவாதம் அளிக்கிறது.

**எடுத்துக்காட்டுகள்:** I. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா II. கரூர் வைஸ்யா வங்கி III. ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி.

**3. வளர்ச்சி வங்கிகள்**

தொழில்களுக்கான நிதிகளைப் பெரிய அளவில் வழங்குவது, அவைகளின் விரிவாக்கம், நவீனமயமாக்கல் ஆகியவற்றிற்கு நிதி அளிப்பது போன்ற சேவைகளைச் செய்வது வளர்ச்சி வங்கிகள் எனும் தனி வகை வங்கிகள் ஆகும். மேலும் தொழில்துறை வங்கிகள் எனவும் அழைக்கப்படுகின்றன. இலாபம் ஈட்டுதல் வளர்ச்சி வங்கிகளின் நோக்கம் அல்ல. அதனுடைய குறிக்கோள் நாட்டை முன்னேற்றுவதும், வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதும் ஆகும். நடுத்தர மற்றும் நீண்ட கால நிதி உதவிகளை ஐந்து முதல் இருபது ஆண்டுகள் வரை வழங்குகிறது. வளர்ச்சி வங்கிகள் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெறுவதில்லை. அவைகள் தொழிற்சாலைகளின் பங்கு பத்திரங்கள் மற்றும் கடன் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. தொழில் நிறுவனங்களுக்குத் தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஆலோசனை சேவைகளை இவைகள் வழங்குகின்றன. இந்தியத் தொழில் வளர்ச்சி (IDBI) வங்கியானது 1964 இல் தலைமை வளர்ச்சி வங்கியாக நிறுவப்பட்டது. 2004 இல் பொதுத்துறை வணிக வங்கியாக மாற்றம் செய்யப்பட்டது. தற்போது இது தொழில் வளர்ச்சி வங்கி பணிகள் மற்றும் வணிக வங்கி பணிகள் ஆகிய இரண்டு செயல்பாடுகளையும் செய்கிறது.

2008 ஆம் ஆண்டில் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி லிமிடெட் (IDBI Limited) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. வேளாண்மை தொழிற்துறை வளர்ச்சிக்காக ஒரு வளர்ச்சி வங்கி நிறுவப்பட்டால் அது விவசாய வளர்ச்சி வங்கி என அழைக்கப்படும். வேளாண்மை மற்றும் கிராம வளர்ச்சிக்கான தேசிய வங்கி (NABARD) அவ்வகையான ஒரு வங்கி.